பக்கங்கள்: பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி 09 | திங்கட்கிழமை | (22-03-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 94

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# ஐ. ம. சு. முன்னணியின் யோசனைகள் தமிழீழ விடுதலைப் புலிகளால் நிராகரிப்பு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்வைத்துள்ள அதிகாரப்பகிர்வு யோசனைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்கமறுத்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

தியத்தலாவ, வெலிமட ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கூட்டங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து பேசுகையில்,

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்வைத்துள்ள எந்தவொரு யோசனைகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்காது நிராகரித்துள்ளனர்.

1983ஆம் ஆண்டுக்குப் பின்பு ஆட்சியமைத்த சகல கட்சிகளும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பலதரப்பட்ட முயற்சிகளை முன்னெடுத்த போதிலும், அவை எவையும் பயனளிக்கவில்லை. ஆனால், ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் மட்டுமே தனது ஆட்சிக் காலத்தின்போது விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையொன்றைச் செய்து வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடிந்தது.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் திட்டமிட்டுச் செயற்பட்டு வந்ததாலேயே சர்வேதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய 10 நிபந்தனைகளுக்கு டோக்கியோ மாநாட்டில் உடன்பாடு காணமுடிந்தது.

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியினர் சமாதானச் செயற்பாட்டை ஒருதலைப்பட்சமாக முன்னெடுத்துச் செல்வதாகக் குற்றம் சாட்டிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியுடன் தொடர்பை ஏற்படுத்த கருணா கடும் பிரயத்தனம் செய்தார்

## தூதுசென்ற ரட்ணகமகே தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுடன் கருணா தொடர்பை ஏற்படுத்துவதற்குத் தாம் தூதுவராகச் செயற்பட்டதாகக் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ரட்ணகமகே தெரிவித்துள்ளார்.

தம்முடன் தொடர்புகளை ஏற்படுத்த கருணா கடும் பிரயத்தனம் செய்தபோதும், தாம் அத்தகைய தொடர்புகள் எதனையும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில், கருணாவுடன் தொடர்பை ஏற்படுத்த தாம் தூதுவராகச் செயற்பட்டதை ரட்ணகமகே உறுதிப்படுத்தியுள்ளார்.

ரட்ணகமகே தான் கருணாவைச் சந்தித்தது உண்மை என்றும், இது பற்றி பத்திரிகைகள் மணந்து பிடித்து தகவல் வெளியிட்டிருந்த போதும், கருணாவைத் தாம் சந்தித்த திகதியையே அவை தவறாகப பிரசுரித்திருந்தன என்றும் கூறினார். இதேவேளை, ஜனாதிபதியுடன் தாம் தொடர்புகொள்ள என்றும் முயற்சித்ததில்லை. ஜனாதிபதி கூறியதுபோன்று அவருடன் தொடர்புகொள்ளும் எந்த முயற்சியிலும் நான் ஈடுபடவில்லை.

ஒரு நாட்டின் தலைவர் என்ற வகையில், ஜனாதிபதி பொறுப்பற்ற முறையில் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டுள்ளார் என கருணா தெரிவித்

(10ஆம் பக்கம் பார்க்க)

### உமாமகேஸ்வரனின் நினைவிடத்தில்

# நிலத்தை அகழ்ந்தெடுத்து அதிரடிப்படையினர் சோதனை

(வவுனியா)

வவுனியா கோவிற்குளத்தில் அமைந்துள்ள புளொட் அமைப்பின் தலைவர் உமாமகேஸ்வரனின நினைவாலயத்திற்கு அருகில் விசேட அதிரடிப்படையினர் நிலத்தினைத் தோண்டி தேடுதல் நடத்தியுள்ளனர்.

நேற்று மு.ப.10.00 மணிமுதல் சுமார் இரண்டுமணிநேரம் இத்தேடுதல் இடம்பெற்றுள்ளது.

பெருமளவு ஆயுதங்கள் மறைத்து வைக்கபபட்டுள்ளதாகத் தெரிவித்தே இத்தேடுதல் நடாத்தப்பட்டது. சுமார் 150 விசேட அதிரடிப்படையினர் கனரக வாகனங்களுடன் சென்று இத்தேடுதலில் ஈடுபட்டனர்.

சம்பவத்தை அறிந்து குறிப்பிட்ட இடத்திற்குச் சென்ற புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் அதிரடிப்படையினரின் நட

(10ஆம் பக்கம் பார்க்க)

# முல்லை வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்குரிய ஏற்பாடுகளை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மேரி எமில்டா சுகுமார் செய்துள்ளார்.

முல்லைதீவு மாவட்டத்தில் இருந்து வாக்களிப்பதற்கு வரவுள்ள வாக்காளர்களுக்குரிய வாகனப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருவதாக வவுனியா அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 52 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிப்பதற்குத் தகுதியுடையவர்களாக இருப்பதாகவும், இவர்களைவட யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்களும் வாக்களிப்பதற்குத் தகுதியுடையவர்களாக உள்ளார்கள் என்றும் அரச அதிபர் மேரி எமில்டா சுகுமார் தெரிவித்துள்ளார். (வ)

# நிபந்தனையின்றியே புலிகளுடன் பேச்சு ஐ.சு.மு விஞ்ஞாபனத்தில் திடீர் மாற்றம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மார்ச் 11ம் திகதி வெளியிட்ட தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மாற்றங்களைச் செய்துள்ளது. கொள்கைகளும் செயற்பாட்டுத் திட்டமும் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள பிரகடனத்தில், புலிகளுடனான பேச்சு நிபந்தனையின்றி நடைபெறும். புலிகளுடனான பேச்சுக்கள் நடைபெறும் அதேவேளை ஏனைய குழுக்களுடனும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னைய விஞ்ஞாபனத்தில் இருந்து நிபந்தனைகளுடனான பேச்சுக்கள் நடத்தப்படும் என்னும் வரிகள் நீக்கப்பட்டுள்ளன.

விஞ்ஞாபனம் வெளியிடப்படுவதற்கு முன்னர் புலிகளுடன் மட்டுமே பேச்சுக்கள் நடத்தப்படும் என்றும் அதற்கு நிபந்தனைகள் இருக்காது என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்திருந்தார். இது பற்றி ஜே.வி.பி சார்பில் தொலைக்காட்சியில் பேட்டியளித்தவர்கள் ஐ.ம.சு.முன்னணியின் விஞ்ஞாபனத்தையே மேற்கொள்காட்டி வந்தனர். தாம் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டவாறே பின்பற்றப்போவதாக விமல் வீரவன்சவும் தெரிவித்தார். கதிர்காமரின் கூற்று எப்படியிருப்பினும் உண்மைநிலையை விஞ்ஞாபனமே காட்டுவதாக அவர்கள் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையிலேயே விஞ்ஞாபனத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. புதிதாக வெளிவந்த பதிப்பில் முகப்பின் அட்டைப்படத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் மார்ச் 11ல் வெளிவந்த விஞ்ஞாபனத்திலோ அல்லது திருத்தப்பட்ட பதிப்பிலோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமி

(10ஆம் பக்கம் பார்க்க)



மக்கள் குரல்கள் மாற்றுக் கருத்தாக உருவெடுத்து மாற்றமொன்று நிகழுமென்பதில் மாற்றமேயில்லை...!

மலைதடை கடந்து புயலிட எழுந்து! மக்களாட்சி மலர உறுதியுடன் உழைப்போம்!! அங்கீகாரமளித்து மக்களே ஆணையிடுங்கள்!



X

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

(8511)



திரு.வீ.ஆனந்தசங்கரி

(முன்னாள் பா.உ. யாழ்ப்பாணம்)

இல. 4

தமிழினத்தின் விடியலுக்கான தீர்வு சுயநிர்ணய உரிமையுடனான சுதந்திர வாழ்வு.....

வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான

சுயேச்சைக்குழு - 01 | X | 4 | I



ஜோர்ஜ்

(முன்னாள் தலைவர், கிளி. மாவட்ட கூட்டுறவுச் சபை)

இல. I

(சி-7449)

# அக்தர் குறித்த விமர்சனத்தால்
# கண்டனத்துக்கு ஆளாகும் கங்குலி

**பாகிஸ்தான் அணியின் வேகப் பந்து வீச்சாளர் சொஹிப் அக்தர் பந்தை எறிகிறார் என்று இந்திய கிரிக்கெற் அணித் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்த கருத்தினை அடுத்து இது தொடர்பான சொற்போர் உக்கிரமடைய ஆரம்பித்துள்ளது.**

பாகிஸ்தான் அணியைப் பொறுத்தவரை அதிவேகப் பந்துவீச்சாளர் சொஹிப் அக்தர் முககிய மானவர். தனது திறமையான பந்து வீச்சு மூலம் அணிக்கு வெற்றி தேடி கொடுப்பவர். பாகிஸ்தானின் கிரிக்கெற் ஹீரோவாகவும் அக்தர் மதிக்கப்படுகிறார்.

கடந்த காலங்களில் பந்தை எறிகிறார் என்ற சர்ச்சையில் பல முறை அக்தர் சிக்கினார். சர்வ தேச கிரிக்கெற் சபை தலையிட்டு இந்தப் பூகாரில் இருந்து அவரை விடுவித்தது. தற்போது பந்தை எறிகிறார் என்ற சர்ச்சையை இந்தியா மீண்டும் கிளப்புவதாக பாகிஸ்தான் கிரிக்கெற் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் முகாமையாளர் ஹாருண் ரஷீத் கருத்துத் தெரிவிக்கையில்,

கங்குலி போன்ற தனி நபர்களின் பேச்சுக்கு நாங்கள் முக்கியததுவம் கொடுக்கவில்லை. எங்களைப பொறுத்தவரை அக்தர் பந்து வீசும் முறையை சர்வதேச கிரிக்கெற் சபையே சரி என்று ஏற்றுக் கொண்டு விட்டது. பின் எதற்கு நாங்கள் தனிநபர் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்?


அவரவர் கருத்துக்களை சொல்வதற்கு ஒவ்வொரு தனி நபருக்கும் உரிமை உண்டு. அதற்காக நாங்களும் பதிலுக்கு பதில் பேச வேண்டும் என்றோ, இந்த விசயத்தைப் பெரிதாக்க வேண்டும் என்றோ அவசியம் இல்லை.

கங்குலி அவரது கருத்தைச் சொல்லியிருக்கின்றார் அவரது சொந்தக் கருத்துக்கு ·நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்க விரும்பவில்லை.

இரு நாடுகளுக்கிடையே அமைதியை உருவாக்கும் நல்லெண்ணத்தொடரான இந்தப் போட்டிகளில் இதுபோன்ற வீண் சர்ச்சைகள் கிளம்புவது குறித்து இரு தரப்பும் கவலையடைந்துள்ளது என்றார்.

இந்தப் பிரச்சினைக்கெல்லாம காரணம் ராவல் பிண்டியில் நடைபெற்ற போட்டி முடிவடைந்ததும் நடந்த நிருபர் சந்திப்பில் கங்குலி அளித்த ஒரு வில்லங்கப் பதில் தான். அந்த நிருபர் சந்திப்பில் சொஹிப அக்தர் பந்துவீசும் முறை சரியாக இருக்கிறதா? இன்று அவா வீசிய பந்துகலெல்லாம் ஒழுங்காக இருந்ததா? என்று கேள்விகள் கேட்கப்படடன. இதற்கு நேரடியாக பதிலளிக்க மறுத்த கங்குலி போட்டியினை தொலைக்காட்சியில் பார்த்தீகள் தானா? அவரது பந்து வீச்சு முறையைப் பார்த்தால் உங்களுக்கு என்ன தோன்றுகிறது? இந்தக் கேள்விககான பதில் அனைவருக்குமே தெரிந்ததுதான். உங்களுக்கு இன்னுமா தெரியவில்லை? என்றார் அவ்வளவுதான் வெடித்தது சர்ச்சை. பாகிஸ்தான் நாளிதழ்கள் எல்லாம கங்குலியின் பேச்சுக்கு கண்டனம் தெரிவிக்க ஆரம்பித்து விட்டன.

இந்த சர்ச்சை பற்றி பெஷாவரில கடந்த 18ஆம் திகதி இந்திய அணித்தலைவர் கங்குலியிடம் கேட்டபோது, இது தேவையில்லாத சாச்சை. நடந்த விடயமே வேறு. அக்




தரின் பந்துவீச்சு எப்படி இருந்தது என்று ஒரு இந்திய நிருபர் என்னிடம் கேட்டார். அதைத்தான் எல்லாரும் தொலைக்காட்சியில் பார்த்தீர்களே என்று மட்டுமே நான் பதிலளித்தேன். வேறு எதுவும் சொல்லவில்லை. இது தேவையில்லாத பிரச்சினை யாகி விட்டது என்று தெரிவித்துள்ளார்.

(உ-121)

## உலக சாதனை படைக்கும்
## நாளை எண்ணி ஷேன்வோண்

இலங்கை அணிக்கெதிராக அடுததவாரம் நடைபெறவுள்ள மூன்



றாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் கொட்னி வோல்ஸின் 519 விக்கெற்றுக்கள் என்ற உலக சாதனையை முறியடிக்கக் கூடியதாக இருக்குமென்று அவுஸதிரேலிய அணியின் நம்பிக்கை நட்சத்திரமும், சுழற்பந்து வீச்சாளருமான ஷேன்வோண் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டிக்கு முன்னர் இந்த நம்பிக்கையானது தனக்கு இருக்கவில்லை எனவும முதலிரு டெஸ்ட் போட்டிகளிலும் 20விக்கெறறுக்களை வீழ்த்திய பின்னர் இந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக வோண் குறிப்பிட்டுள்ளார்.

ஊக்கமருந்து பாவித்தமைக்காக 12மாத விளையாட்டுத் தடையின் பின்னர் டெஸ்ட் அரங்கில் காலடி எடுத்துவைத்த ஷேன்வோண் இத் தடையினால் தனது கிரிக்கெற் வாழ்க்கைக்கு எதுவித பாதிப்பும் ஏறபடவில்லையென்பதை தற்போது நிருபித்துக் காட்டியிருக்கிறார்.

அத்துடன், இலங்கை அணிக்கெதிராக முதல இரு டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு பெரும் பங்காற்றிய வோண் இதுவரை 511விக்கெற்றுக்களை வீழ்த்தியுள்ளார்.

இலங்கை அணிக்கெதிராக அடுத்தவாரம் கொழும்பு மைதானத்தில் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டியில் 9விக்கெற்றினை வழ்த்தினால் வோல்ஸின் உலக சாதனையை இவர் முறியடித்து விடுவார்

அத்துடன், இவருக்கு அடுத்ததாக இலங்கை அணியின் முத்தையா முரளிதரன் வோணை விட 6 விக்கெற்றுக்கள் குறைவாக உள்ள நிலையிலும் முதலிரு டெஸ் போடடியில் இவரும் 20 வக்கெற வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (உ-121,68)



**தென்னாபிரிக்காவுக்கு எதிராக முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி சார்பாக சிறப்பான அத்திபாரத்தை இட்டுக் கொடுத்து தனது சதத்தினைப் பூர்த்திசெய்த நியூஸிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் கிறிஸ்கெய்ன்ஸ் சதத்தினைப் பெற்ற மகிழ்ச்சியில்.**

## பாகிஸ்தானின் படுதோல்விக்கு
## "டிவி" நடுவரே காரணகர்த்தா
### பரவலாக கண்டனக் கணைகள்

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கராச்சியில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் "டிவி" நடுவரின் தவறான அறிவிப்பே தோல்விக்கு முக்கிய காரணம் என புதுவிதமான சர்ச்சையைக் கிளப்பியுள்ளது பாகிஸ்தான்.

கடந்த 13ஆம் திகதி கராச்சியில் நடைபெற்ற முதலாவது ஒரு நாள் சாவதேச போட்டியில் பாகிஸ்தான் அணி, இந்திய அணியிடம் 5ஓவர்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது

இப போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 344ஓட்டங்களைப் பெற்றது. வெற்றிபெற 345ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 49வது ஓவரில் 340ஓட்டங்களை எடுத்திருந்தது. இந்த ஓவரில் வேகப் பந்து வீச்சாளர் சஹிர்கான் வீசிய 5வது பந்தை பாகிஸ்தானின் சொஹிப் மலிக் தூக்கி அடிக்க அதை அபாரமாக பிடி எடுத்தார் முஹமட் கைவ்.

இந்த நேரத்தில் அனுபவம் மிக்க வீரரான மொயின் கான் மறுமுனைக்கு சென்றுவிட்டார். இதனால் ஓவரின் இறுதிப் பந்தினை மொயின் கான்தான் சந்தித்திருக்க வேண்டும்.

ஆனால் "டிவி" நடுவரான ஆசாத ராபி புதிதாக களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் நபீத்தான் பந்தை எதிர்கொள்ள வேண்டும் என்று அறிவித்துவிட்டார். ஓவர் முடிநதுவிட்டதாக நினைத்தே இவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பின்னர் கடைசிப்பந்தை சஹிர் கான் வீசவந்தபோது தான் தனது தவறை உணர்ந்துள்ளார். ஆனாலும் களத்தில் இருந்த நடுவர் சைமன் டாபஸை தொடர்புகொண்டு தவறைத் திருத்த இவர் முயற்சி ஏதும் மேற்கொள்ளவில்லை.

ஒருவேளை, ஓவரின் இறுதிப் பந்தை மொயின்கான் சந்தித்திருந்தால் ஆட்டத்தின் போக்கே மாறியிருக்கும் என்று பாகிஸ்தான் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது குறித்து அதிகார பூர்வமாக புகார் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இருப்பினும் தவறாக அறிவித்த தற்காக ஆசாத் ராபியை போட்டி நடுவர் ரஞ்சன மடுகல்ல கண்டித்துள்ளதாகக கூறப்படுகிறது. (உ-121)

## விளையாட்டுச் செய்திகள்

## கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் ஸ்கந்தா முதலிடம்

(இணுவில்)

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளிடையே நடாத்தப் பட்ட கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகளில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சிறப்பான வெற்றிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளது.

சுமார் 30பாடசாலைகள் பங்கு பற்றிய இக்கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி 46 முதலாம் இடங்களையும்,22 இரண்டாமிடங்களைப் பெற்றுள்ளதுடன், இராமநாதன் கல்லூரி 18முதலாமிடங்களையும் 11இரண்டாமிடங்களையும், இணுவில் மத்திய கல்லூரி 11முதலாமிடங்களையும், 9 இரண்டாமிடங்ளையும் பெற்று முதன்நிலையில் உள்ளன.

இவற்றில் வலய மட்டப் போட்டிக்குத தெரிவானவர்களுக்கான வலயமட்ட விளையாட்டுப்போடடிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 3நாட்களுக்கு நடைபெறவுள்ளன.

(122)



**மேற்கிந்திய அணிக்கெதிரான 2வது விக்கெற்றுக்காக துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணியின் நஸார் ஹுசைனும், மார்க் புச்சரும் ஓட்டம் ஒன்றைப் பெறும்போது.**

## மெய்வன்மைப் போட்டி

(ஊர்காவற்றுறை)

யா/வேலணை சரஸ்வதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ்.பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால் வாணிதாசன் கலந்துகொள்ளவுள்ளார். (உ-75)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

80

## நான்காம் பகுதி
## முக்குவர் சட்டம்

### 1.மட்டக்களப்பு தேசம்

பிள்ளைக்கு முதல்முதலாகச் சோறூட்டும் அன்னப்பிராசனம் ஒரு மங்களமான நிகழ்ச்சியாகக் கொண்டாடப்படும். சோதிடரால் நிச்சயிக்கப்பட்ட சுபநேரத்திற் பால்,பழம்,சர்க்கரை என்பவற்றோடு கலந்த சோற்றை நிறைவுடைய முதியவர் ஒருவர் பிள்ளைக்கு ஊட்டுவார். பல்லு முழைக்கும்போது பல்லுக்கொளுக்கட்டை அவித்துப் பிள்ளையின் தலைமேல்கொட்டி வைபவரீதியாகக் கொண்டாடுவர்.

பெண்பிள்ளைகள் பக்குவப்படும் நேரம் சுப முகூர்த்தமாதல் வேண்டும் என்று கருதப்படும். அது மதியவேளையிலே சம்பவித்தால் அப்பிள்ளை தனது வாழ்கையிலே சுப செல்வங்களோடும் பிள்ளைகள் பலரைப் பெற்றும் வாழக்கூடும் என்று கருதப்படும். நள்ளிரவிலே பக்குவப்படும் பெண் விதவையாவாள் என்று நம்பப்படுகின்றது. திங்கள்,வியாழன்,வெள்ளி போன்ற கிழமைகள் அதிர்ஷ்டமான நாட்களாகக் கொள்ளப்படும். பக்குவம் அடைந்த பெண்ணுக்குச் சில நாட்கள் கழிந்தபின் பரிசுத்தச்சடங்கு செய்வார்கள். அவளை நீராட்டிய பின் அழகான ஆடை, ஆபரணங்களை அவளுக்குச் சூட்டுவார்கள். அவளுக்கு எற்படக்கூடிய கண்ணூறு என்னும் தோஷத்திற்குப் பரிகாரமாகச் சில சடங்குகளைச் செய்வார்கள். பெண்கள் கூடிக் குரவை போடுவார்கள். அங்கு போய்க் கூடுகின்ற எல்லோருக்கும் மஞ்சள் நீர் தெளிப்பதும் வழமையாகும்.

தை,பங்குனி,சித்திரை, வைகாசி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களிலுள்ள சுபதினங்களிற் கலியாணங்கள் நடைபெறும். கலியாணம் நடைபெறுவதற்கு நான்குஅல்லது ஐந்து நாட்களுக்கு முன்பாக அதற்கு அழைக்கப்படுவோரின் வீடுகளுக்குப் போய் வெற்றிலை கொடுத்துக் கலியாணம் பற்றிச் சொல்லுவது வழமை. முற்காலங்களிலே பெண்பிள்ளைகளை இளம் வயதிலே கலியாணம் பண்ணிக்கொடுப்பது வழமை. கலியாணம் நடைபெறுவதற்கு முன்பாக வரும் நாளன்று ஆண் வீட்டார் பலவகையான உபகாரங்களை,வாத்தியங்கள் சகிதமாக ஊர்வலமாகப் பெண் வீட்டுக்குக் காவுகளில் எடுத்துச்செல்வர். உபகாரமாகக் கொடுக்கப்படும் பொருள்கள் அவரவர் இயல்புக்குத் தக்கதாயிருக்கும்.

பெற்றோர் தங்கள் பருவமடைந்த பெண்பிள்ளைகளைக் கலியாணம் முடித்துக் கொடுக்குமிடத்து, தங்கள் இயல்புக்குத் தக்கபடியாகப் பொன்,வெள்ளி நகைகளையும், வெள்ளி, செம்பு, பித்தளை முதலான உலோகப்பாத்திரங்களையும்,வீடுவளவு, அடிமைகள் முதலானவற்றையும் அவர்களுக்குக்கொடுப்பார்கள். கடுக்கன், மோதிரம்,அரைஞாண் முதலான ஆபரணங்களையும் வயல் நிலம், காணி, ஆடு, மாடு முதலான சொத்துகளையும் ஆண்பிள்ளைகள் பெறுவார்கள் முக்குவரின் வழமைப்படி ஒருவனுடைய சொத்துகள் எல்லாம் அவனுடைய மருமக்களின் உரிமையாகும்.

ஒருவன் இறக்குமிடத்து அவன் வசமாயிருந்த நிலபுலங்கள் முதலான எல்லாச் சொத்துகளும் அவனுடைய சகோதரிக்கும் அவளுடைய சந்தானத்தில் உள்ளவர்களுக்கும் உரிமையாகும் அவை தொடர்பாக,அவன்பட்ட கடன்கள், ஒப்பந்தங்கள், செலவுகள் ஆகியன மீளப்படாதிருப்பின் அவற்றுக்கும் அவர்களே பொறுப்பாளிகளாவர்.

வெள்ளாளர், செட்டிகள் ஆகியோரிடையிலே நிலவி வந்த வழமை இதிலிருந்தும் வேறுபட்ட ஒன்றாகும். பெற்றறோர் இறக்குமிடத்தில் அவர்களுக்குரிய மரணச்சடங்குகளைச் செய்து முடித்த பின் அவர்களின் சொத்துகளைப் பிள்ளைகள் பகுந்து கொள்வர் . பெற்றோர் கடன் பட்டுத் தங்கள் சொத்துகளை ஈடாகவோ ஒற்றியாகவோ பிறரிடம் ஒப்படைத்திருந்தால் அவற்றை மீளுவோர் தங்கள் பணத்துக்குப் பெறுமதியான சொத்துகளை எடுத்துக்கொள்வார். மிகுதியான உடைமைகள் சகோதரரிடையிலே பகிர்ந்து கொள்ளப்படும்.

விவாகரத்துத் தொடர்பாக முற்காலங்களில் ஒரு வழமை காணப்பட்டது. கலியாணம் முடித்துக் குடித்தனமாகிய கணவனும் மனைவியும் தம்மிடையே தகராறுற்றுத் தொடர்ந்தும் கூடி வாழ முடியாது என்று கண்டால், அவர்கள் பிரிந்து கொள்ளலாம். அது எப்படி என்றாற் குடிமக்களாகிய வண்ணான், அம்பட்டன் ஆகியோரின் முன்னிலையாக அவர்கள் கூடியவிடத்து கணவனானவன் ஒரு பாக்கினைக் கையில் வைத்திருந்த வண்ணமாக "இனி மேல் இவளுக்கும் எனக்கும் எதுவிதமான தொடர்புமில்லை" என்று சொல்லிய பின் தன் கையில் வைத்திருந்த பாக்கை வண்ணானிடம் கொடுக்கவேண்டும். அந்தப் பெண் வேறொரு பாக்கை வாங்கிக்கொண்டு தனக்கும் தனது கணவனுக்கும் மேற்கொண்டு எதுவிதமான உறவுகளும் இருக்கப்போவதில்லை என்று சொல்லுவாள். அத்துடன் அவர்களின் பந்தங்கள் எல்லாம் அற்றுப்போய்விடும். அவர்களில் இருவரும் தங்கள் விருப்பத்திற்கேற்பப் பிறரைக் கலியாணம் பண்ணிக்கொள்ளலாம்.

மரணச்சடங்குகள் ஒருவர் இறந்ததும் மூன்று, நான்கு மணித்தியாலயங்களில் நடைபெறும். எரித்தல், அடக்கஞ்செய்தல் ஆகிய இரு வழமைகளும் உண்டு. பொதுவாக வயது முதிர்ந்தோரது சடலங்களையே எரிப்பது உண்டு. முற்காலங்களிற் பெட்டிகளிற் சடலங்களை வைக்கும் வழக்கம் இந்துக்களிடையே காணப்படவில்லை பிரேதங்களை வண்டிகளில் வைத்து, அவற்றை மயானத்திற்கு இழுத்துச்செல்லும் வழக்கம் இல்லை. பாடைகளில் அவற்றை வைத்து மயானத்திற்குக் காவிக்கொண்டு போவார்கள். மிக நெருங்கிய உறவினர்களே அவற்றைக் காவிச் செல்வர்

செத்தவீட்டில் உணவுகளை அருந்துவதும் பானங்களை அருந்துவதும் விலக்காகும். பிரேதம் வீட்டில் இருக்கும் வரை அடுப்பு எரிப்பதில்லை. மரணத்தின் காரணமாக ஆசௌசம் ஏற்படுகின்றது என்ற காரணத்தால் இவ்விதமான காரியங்களுக்குத் தடை விதிக்கப்படுகின்றது.

தகனம் முடிந்த பின், மூன்றாம் நாளிலே காடாத்து நடைபெறும் சாம்பலை அள்ளிக் குடத்திலே போட்டு ஆற்றிலோ, கடலிலோ வீசி விடுவார்கள். ஒருவரின் எரிந்த தகனத்தின் சாம்பலை எடுத்துச் சூனியம் செய்து விடுவார்கள் என்ற நம்பிக்கையும் காணப்பட்டது. 7 நாட்களுக்கு இறந்தவரின் வீட்டில் உள்ளவர்களுக்கு வேண்டிய உணவு வகைகளை உறவினர்கள் கொடுத்துவருவது வழமை. எட்டாவது நாளான்று வீட்டையும் சுற்றாடலையும் பரிசுத்தப் பண்ணிச் சம்பிரதாய பூர்வமாக அடுப்பெரித்துச் சமையல் செய்து, உணவுப்பண்டங்களைப் பரிமாறிப் பின்பு படிப்படியாகவே வழமையான சீவியத்தை மீண்டும் தொடங்குவார்கள். பின்பு , 31ஆம் நாளான்று அந்தியஷ்டி என்னும் கிரியை சமயாசாரமாக நடைபெறும். தந்தைக்கும் தாய்க்கும் முறையே மூத்தமகனும் இளைய மகனும் கடமை செய்வார்கள். இறந்த பெற்றோரின் நினைவாகவும் அவர்கள் நற்கதி பெறுதல் வேண்டியும் அமாவாசை, பௌர்ணமி ஆகிய தினங்களில் விரதமிருப்பார்கள். கிறிஸ்தவர்கள் 31ஆம் நாளிலே இறந்தவர்களின் பேரால் வறுமையான மக்களுக்கு விருந்து சமைத்துக்கொடுப்பது வழக்கம். இந்துக்கள் வருடந்தோறும் இறந்தவர்களின் திதிகளிலே திவசஞ் செய்வதுண்டு. அது சமயாசாரமகப் பிராமணராலே செய்யப்படும். அன்று ஆசாரமாகவிருந்து வழிபாடு செய்வதும், ஒவ்வொருவருந் தங்கள் தகைமைக்கேற்ப இனபந்துக்களை வரவழைத்து விருந்துபசாரம் செய்வதுண்டு.

(தொடரும்)

## விடுதலைக்கு விலைபேசிய கருணாவுக்கு கிழக்கில் பெரும் எதிர்ப்பு அலை

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாணத் தளபதியாக இருந்த கருணாவிற்கு எதிராக மக்கள் ஆட்சேபக் குரல்களை எழுப்பி வருவதாக கிழக்கு மாகாண செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளின் தளபதியாக பலத்த செல்வாக்குடன் இருந்த இவர் புலிகளின் தலைமை மீதும் தளபதிகள் மீதும் பல பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்து பிரிந்து சென்றுள்ளார். தனது கருத்துக்களை மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக கிழக்கு மக்களிடையே பல பிரதேசவாதக்கருத்துக்களையும் பரப்பி வந்துள்ளார்.

எனினும் மக்கள் உண்மை நிலையை தற்போது உணர்ந்து விட்டனர். இதனால் மக்கள் கருணாவின் இச் செயற்பாடுகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக ஹர்த்தால், கண்டனப்பேரணி, கணடனப் போராட்டங்கள், கண்டன சுவரொட்டிகள், துண்டுப்பிரசுர விநியோகங்கள் என்பவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் தளபதியாக இருந்தபோது கருணாவிற்கிருந்த சொல்வாக்கு தற்பொழுது படிப்படியாகக் குறைந்து ஆட்சேப அலைகள் மேலோங்கி வருவதை எடுத்துக்காட்டுவதாக சுட்டிக் காட்டியே இத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

"வடக்குக் கிழக்கு இணைந்த தாயகம்" "விடுதலைப்புலிகளே தமிழ் மக்களது ஏகபிரதிநிதிகள்" என்ற தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அபிலாஷைகளுக்கு புறம்பாக இவர் செயற்பட்டு வருகின்றமையே இதற்குக்காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-63,4)

## கொலைச சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் கே. ஏ.பாயிஸை கொலை செய்யத் திட்டமிட்டதாக கூறி நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாலாவி புழுதி வயல் பகுதியில வைத்து இவர்கள் கடந்த வியாழன் அன்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து கைக் குண்டு ஒன்றும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ச)



அராலி இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலயக் கணக்காளர் ந. யோகேந்திரராஜா மங்கள விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் மற்றும் கல்லூரி அதிபர் வே. மோகனநாதன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:ப.தேவகுமார்)



கைதடி ப.நோ. கூ. சங்கத்தின் பொதுமுகாமையாளர் இ. சற்குணநாதன் ஓய்வு பெறுவதை முன்னிட்டு தொழிற் சங்கப் பிரமுகர் ந. குமாரதேவன் அவருக்கு அன்பளிப்பு வழங்குவதைப் படத்தில் காணலாம்.



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாடடுப் பேரவையினால் நடாத்தப்பட்ட "ஞானச்சுடர்" சஞ்சிகையின் வாசகர் போட்டியில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு நல்லை ஆதீன முதல்வர் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:சு.கணபதிப்பிள்ளை)

கருணா மின்னாமல் முழங்காமல் முடிவெடுத்து விட்டதாக உடனடியாக அவசரப்பட்டுஅறிக்கை விட்டவர்களெல்லாம், பின்னர் சுதாரித்துக்கொண்டு, இது திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒரு சதி என்பதை உணர்வலையாக

# கரணமடிக்கும் கருணாவின் பின்னணியில்

வெளிப்படுத்த ஆரம்பித்தார்கள். கருணாவின் முறுகல் நிலைக்கும் அதிரடி முடிவுகளுக்கும் பலதரப்பட்ட



காரணங்களும் முன்வைக்கப்பட்டன. பணம் பெற்றார் என்றனர் சிலர், பதவி மோகம் என்றனர் ஒருசிலர், சதித்திட்டம் வெளிவந்ததால் அதை மறைக்க மாற்றுத் திட்டம் என்றனர் பலர். பழியை ஆளும் கட்சியிலும், எதிர்க்கட்சியிலும், ஜே.வி.பி.யிலும், எதிரணித் தமிழ்க் கட்சிகளிடமும் கூட மாறிமாறிப் போட்டனர் இன்னும் சிலர். ஆய்வாளர்களும் படித்தவர்களும் இன்னும் சிறிது வேகமாகச் சிந்தித்து, அயல் நாட்டின்மீதும், அமெரிக்காவின்மீதும் பழி போட்டனர். போதாததற்கு,

அமைப்பின்கருத்துக்கூறவல்ல ஒரு முக்கியஸ்தரும்



அமெரிக்காமீது அப்பட்டமாகப் பழிபோட, அமெரிக்கா அடித்து முந்திக்கொண்டு, ஐயையோ, இதற்கும் எனக்கும் எதுவுமில்லையே, இது ஒரு அபாண்டமான பழி என்று குய்யோ முறையோ என்று எம்பிக் குதித்தது. மூன்றாம் தரப்பு சக்தி ஒன்று இருப்பதை ஊர்ஜிதம் செய்த அனைவரும், அனைத்து ஊடகங்களும், அனைத்துக் கருத்துக்களும் இந்த சக்தியை இனம்காண ஏனோ பின்னின்றன.

### ஆளும் ரணில் கட்சி செய்திருக்கலாமா?

பொதுவாகப் பார்த்தால் இதற்கு நிறைய வாய்ப்பிருக்கிறது. ஒரு பக்கம் பேச்சுவார்த்தை மேசையில், விடுதலைப் புலிகள் அமைப்பை ஆசுவாசப்படுத்தி, சமாதானம் செய்து, கேட்பதையெல்லாம் தரவிரும்புவதாக உறுதிகூறிய ஆளும் கட்சியான ரணில் கட்சியின் உளவுப்படை கூட இதைச் செய்திருக்க வாய்ப்பிருக்கிறது. ஆனால் இதற்கான சாத்தியம் ஒரு 10 வீதம் இருக்கலாம். ரணில் தலைமை வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த கால நடவடிக்கைகளை ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், இது மிகவும் சாதகமான ஒரு வாதமே. முதலில், விடுதலைப்புலிகளைபேச்சு மேசைக்கு முன்நிபந்தனை எதுவுமின்றி வரும்படி ஜனாதிபதி சந்திரிகா அழைத்தபோது, அதற்கெதிராக உச்சமாய்க் கத்திய எதிர்க்கட்சியின் தலைமை ஆசனத்தில் உட்கார்ந்திருந்தவர் இந்த ரணில் தான். அப்போது, ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கிய வியூகத்தில், வடக்கையும் கிழக்கையும் பிரித்து, பிரதேச வாதத்தைக் கிளப்பினால் தமிழரின் இனப்பிரச்சினை விரிசலடையும்

# பிரதமரா? ஜனாதிபதியா?

என்று திட்டமிட்டிருக்கலாம். இந்த திட்டமிடல் ஒன்றும் புதியதல்ல. ஜே.ஆர்., பிரேமதாச காலத்திலிருந்து இப்படி வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் திட்டம் தொடரப்பட்டே வந்தது. இந்தக் கருத்தை ஏற்காதவர்கள், ஒரு சில தினங்களுக்கு முன்னர் எமது புரட்சிக் கவிஞர் காசிஆனந்தன் எழுதிய நறுக்கான வரலாற்றுக் காரணத்தைப் படித்தால், பட்டென்று புரிந்து கொள்வார்கள். இது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு புதிய திட்டமல்ல. இது வரலாற்றுத் திட்டம் தான்.

### சனாதிபதி சந்திரிகாவின் நிலை எப்படி?

ஆனாலும், ரணில் கட்சி செய்திருக்க 10 வீத வாய்ப்பிருக்குமென எண்ணினால், சந்திரிகாவின் கூட்டுக்கட்சி செய்திருக்க 20 வீத வாய்ப்பிருந்திருக்கிறது. முன்னெடுக்கும் அமைச்சு வண்டி தேரிட்டது. வடக்கையும் கிழக்கையும் இணைத்து சுயாட்சியமைப்பது, சிங்கள பௌத்த இலங்கைக்கு நிரந்தர ஆபத்தைத் தரும் என்பதை அறியாதவரல்ல சந்திரிகா. அதனால், அதை உடைக்க நிரந்தரத் திட்டமிடல் தேவைப்பட்டது. ஏற்கனவே சந்திரிகாவிடம் இந்தத் திட்டமிடலுக்கான ஆயுதங்கள் கைவசமிருந்தன. என்னவென்று யோசிக்கிறீர்களா? வேறு என்ன, மனித ஆயுதங்கள் தான். அதுவும் தமிழரைக் காட்டிக்கொடுக்கும் தமிழ் மனித ஆயுதங்கள் தான். அவர்களிடம் சந்திரிகா இலகுவாக, இதற்கான வியூகங்களுக்கு விடை கேட்டிருப்பார். எமது தமிழ் உடன்பிறப்புக்களுக்கு காலை இழுத்து விழுத்தும் விடயமென்றால், அவல் கிடைத்த மாதிரி. அப்படியே அச்சொட்டாய் அலகுஅலகாய், விடுதலைப் புலிகளின் கட்டமைப்பையும், அதன் கழுத்தில் பாம்பு சிக்குவதாக இருந்தால், கழுத்து கிழக்கில் தனித்துக் கிடப்பதையும் கோடுபோட்டுக் காட்டியிருப்பார்கள். ஏற்கனவே ரத்வத்தையை வைத்து கோட்டையில் கொடியேற்றி, சிங்கள தேசத்தில் பட்டாசு வெடித்த வெற்றிநாயகி சந்திரிகா, மீண்டும் கொடியேற்ற, தட்டித்தூசு தட்டி வெளியே தூக்கிய சிறீமா காலத்து திட்டமாக இந்தப் பிரதேசவாதம் கைகொடுத்திருக்கலாம். இதற்கு நிறைய வாய்ப்பிருக்கிறது.

### அமெரிக்கா மீது பழி விழுந்தது எப்படி?

'ஆலையில்லா ஊருக்கு இலுப்பம்பூ சர்க்கரை' என்பார்கள். 'எண்ணையில்லா திருமலையில், எண்ணை தாங்கிச் செல்லும் கப்பல் தரித்து தர்பார் நடத்திட தரமான துறைமுகம் இருக்கின்ற' விடயமொன்றும் அமெரிக்காவுக்குத் தெரியாத பரம இரகசியமல்ல. திருமலையைப் பற்றிக்கொள்ள அமெரிக்கா எடுக்காத முயற்சியும் இல்லை. நேரடியாகச் சொன்னால், வடக்கும் கிழக்கும் இணைந்து, பிரபாகரன் கட்டுப்பாட்டில் இருக்கும்வரை, கிழக்கிலிருந்து திருமலையைப் பிரித்தெடுக்க எந்தக் கொம்பன் வந்தாலும் இயலாது என்பது இறுதியில் அமெரிக்காவுக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. எத்தனை ஜாலங்கள் விட்டாலும், எத்தனை காலங்கள் பொறுத்தாலும், எத்தனை அழுத்தங்கள் கொடுத்தாலும், வடக்கு கிழக்கு இணையாத ஒரு மாற்று முடிவுக்கு பிரபாகரன் இணங்கி வருவதாக இல்லை. கடிந்து பார்த்தார்கள், வழிந்து பார்த்தார்கள், சீண்டிப் பார்த்தார்கள், சிரம்தாழ்ந்தும் பார்த்தார்கள் பிரபாகரன் எப்போதும் போல், 'வடக்கும் கிழக்கும்' என்ற ஒரே வாய்ப்பாட்டையே ஓதிக்கொண்டிருந்தார், வேறு வழி, 'உளவுப்படையினூடான திட்டமிடல்'.நீண்டகால வரலாறுகளையெல்லாம் தூசிதட்டிப் பார்க்கும் அவசியமில்லை, அண்மைக்கால ஆப்கானிஸ்தான், ஈராக், பலஸ்தீன பிரச்சினைகளில் அமெரிக்காவின் அணுகுமுறையைப் பார்த்தாலே பளிச்சென்று புரிந்து விடும். பணம், பதவி, புகழ், பாதுகாப்பு என்ற நோய்களுக்கு அடிமையாகாத மனிதர்களே இல்லை என்பதை அமெரிக்கா நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறது, சதாமின் இரகசியங்களை அறிய பதவி வழங்கினார்கள், சதாமின் இரு மகன்களின் இருப்பிடத்தை அறிய பணம் வழங்கினார்கள், சதாமையே கண்டுபிடிக்க அதே பணம் உதவியது, அல்-கைதாவை ஒழிக்கிறேன் பார் என்று ஆப்கானிஸ்தான் புறப்பட்டு, பணத்தையும் பதவியையும் காட்டி, சிறுபான்மைக் கட்சியொன்றை ஆட்சிப்பீடம் ஏற்றியது, அங்கிருந்த ஏனைய சிறு இயக்கங்களை பணத்தைக்காட்டி அடக்கிப்போட்டமை, பலஸ்தீனத்தில் யசீர் அரபாத்தை தமது தேவை கருதி கொஞ்சுவதும் துப்புவதும் ஏய்ப்பதுவுமாய் தொடர்கதைகள் என்று அமெரிக்கா உலகெல்லாம் ஓச்சுரிமை கொண்டாட எவ்வழியிலும் முயற்சியெடுக்க எப்போதும் தயாராகவே இருக்கிறது. ஈராக்கில் நுழைவதற்காக,

# அமெரிக்காவா? இந்தியாவா?

ஆபிரிக்க நாட்டிற்கு 6 மில்லியன் நிதியுதவி வழங்கினார் ஜோர்ச் புஷ். ஈராக்கிற்கும் ஆபிரிக்காவிற்கும் என்ன சம்பந்தம்? இருக்கிறது. ஐ.நா.வின் செயலாளர் ஆப்பிரிக்க நாட்டவர். அவரது நாட்டிற்கு 6 மில்லியன் நிதியுதவி வழங்கிய கையோடு, ஐ.நா.வின் ஆதரவின்றி அப்பட்டமாய் இராணுவ அராஜகம் பண்ணினார் ஈராக்கில். ஐ.நா. வாழாவிருந்தது. ஆக, திருமலையின் துறைமுகத்தில் கோலோச்ச சந்தர்ப்பம் கிடைத்தால், ஆசிய பிராந்தியத்திலுள்ள கடலெல்லைகள் மட்டுமல்ல, அத்தனை நாடுகளும் கூட, சற்றே பயப்பிராந்தியோடு 'கப்சிப்'பென்று வாழும் என்பதில் அமெரிக்காவுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. அதனால், அதற்கான ஒரு நிரந்தர வியூகமாக, கிழக்கை வடக்கிலிருந்து பிரித்தால், பிரிக்கப்பட்ட கிழக்கின் புதுத்தலைமையை இலகுவாக வாங்கிவிடலாம் என்று வியூகம் அமைக்க எந்தப் படித்தவரின் புத்தியும் தேவைப்படவில்லை அமெரிக்காவுக்கு.


### இனி, இந்திய பக்கம் நம் பார்வையைத் திருப்பலாம்!

பாரதத்தின் உளவுப்படை திட்டமிட்டிருக்கலாம் என்பதற்கே அதிகப்படியான வாக்குகள் இதுவரை ஊடகங்களிடமிருந்து விழுந்திருக்கிறது. இதற்கு காரணங்கள் இல்லாமலும் இல்லை.வடக்கும் கிழக்கும் இணைந்த ஆட்சி அமைவது, நாளடைவில் தனிநாட்டிற்கு வழிவகுக்கும். தனிநாட்டுக் கோரிக்கை வலுக்கும் பட்சத்தில், தமிழ்நாட்டிலும், தனிநாட்டுக்



கோரிக்கை வலுப்பெற வாய்ப்பிருக்கிறது. தமிழரின் குரல் ஆசியாவில் வலுப்பெறுவது, தெலுங்கு-கன்னடம்-மலையாளம் உட்பட ஏனைய இரண்டாம் மொழி மாநிலங்களுக்கு தலையிடியாக அமையலாம்.இந்தியாவின் சொல் கேட்டு நடக்கத் பிரபாகரனுக்கு, ஒரு பாடத் படிப்பிப்பது. இந்திய சமாதானப் படையை





எதிர்த்துப் போரிட்டு, பலத்த அவமானத்தை உண்டுபண்ணியதுடன், தோல்வியுடன் விலகிக்கொள்ள அழுத்தம் கொடுத்தமை. ராஜீவ் கொலை வழக்கின் பிரதான சந்தேகநபர் பிரபாகரன். ஜெயலலிதா போன்றவர்கள் ஆதரவு வழங்கிய சிறிய அமைப்புக்களை இல்லாதொழித்தமை. தமிழ்நாடு அரசியலில் கடுமையான ஊடுருவல் இருப்பது. ஏனைய இந்திய தனிநாட்டுக் கோரிக்கையாளர்களுக்கு உதாரணமாக இருப்பது. இந்துமா சமுத்திரத்தில் தனிக்கோலோச்ச முடியாமலிருப்பது,

(7ஆம் பக்கம் பார்க்க)

# நலவாழ்வு என்றும் நமதாக வேண்டும்

பொதுவாக யாவருக்கும் மருத்துவத் தொழிலின் மீது அதிகமான எதிர்பார்ப்புகள் இருந்துவருகிறது. ஆனால் அவர்கள் நோய்வாய்ப்படும் போது அதைத்தாமே குணப்படுத்தககூடிய ஒவ்வொரு வழிமுறையையும் அறிந்துகொள்ள முயல வேண்டும். மருத்துவர்களும், மருத்துவத தாதியர்களும் மருத்துவ மனைகளிலோ அல்லது ஆய்வுக்கூடங்களிலோ பணியாற்றும் வகையில் தான் பிரதானமாகப் பயிற்று விக்கப்படுகிறார்கள். உடல் நலங்குன்றி வருகிறவர்களை அவர்களால் குணப்படுதத முடியும்; மக்களுடைய உடல்கள் கட்டுக்குலையும் போது அவற்றைச் சீர்ப்படுத்தவும் அவர்களால் முடியும்.

இருந்தபோதிலும் நம்மில் பெரும்பாலானவர்கள் மருத்துவர்களின உதவியில்லாமலேயே நல்ல உடல் நலத்துடன் காணப்படுகிறார்கள். ஆகவே ஒவ்வொருவரும் மருத்துவர்களைப் பார்த்து கிசிச்சை எடுத்துக்கொள்ளவேண்டிய கட்டாயமில்லை. மருத்துவர்களும், மருத்துவத்தாதியர்களும் மட்டுமே மக்களை உடல்நலமுடையவர்களாககிவிடமுடியுமா. ஆக, மருத்துவக் கவனிப்புக்கும் மேலாக மக்களை உடல்நலமுடையவர்களாக்கக்கூடிய காரணிகள் உண்டா என்பதுதான் நமது கேள்வி!

இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக காசநோயை (Tuberculosis) எடுத்துக்கொள்வோம். இங்கிலாந்து நாட்டில் இந்நோய்க்காக தனிப்பட்ட வகையில் மருந்துகள் கண்டுபிடிக்கப்படுமுன்னரே அங்கு காசநோய்த் தாக்குதல் குறையத் தொடங்கிவிட்டது. அதன் பிறகு மக்கள் இந்நோயைக குணமாகக மருத்துவ கவனிப்புடன வேறு சில காரணிகளும் உள்ளன என்பதைக் கண்டுகொண்டனர். அப்படிப்பட்ட காரணிகளில் ஒருசில கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

## உணவு

மக்களை உடல்நலமுடைவர்களாக ஆக்க உதவும் அடிப்படைத் தேவை உணவுதான். இன்றைய நிலையில் ஏராளமானவர்கள் தம்மை உடல்நலம் உடையவர்களாக வைத்திருக்கப் போதுமான உணவை உண்பதில்லை; அது அவர்களுக்குக் கிடைப்பதில்லை என்றுகூட கூறலாம்! குழந்தைகளைப் பொறுத்தவரை இது மிக உண்மை! நீண்டகால உணவுப் பற்றாக்குறையானது குழந்தைகளின் வளர்ச்சியைப் பாதிக்கும்.



அறியாமையினால் நம் மக்களில் பெரும்பாலானோர் நல்ல, தரமான உணவுகளை உண்ணத் தவறிவிடுகிறார்கள். ஏழைகள் தமது வருவாயில் பெரும் பகுதியை உணவிற்காகவே செலவிடுகிறார்கள் என்பது மிகவும் தெளிவு. பொதுவாக அவர்களுடைய உணவு நன்கு பதப்படுத்தப்படாத - எளிய உணவாக இருந்தாலும், ஓரளவு ஊட்டச் சத்து அடங்கிய தரமான உணவாகவே அமைந்துவிடுகிறது. சற்று செல்வ நிலையிலுள்ளவர்களின் உணவின தரம் மாறுகிறது. அவர்கள் இயந்திர சாதனங்களால் தீட்டிய - சுத்திகரித்த உணவுப் பொருட்களையே உட்கொள்ளுகிறார்கள். இதை எல்லாச சமயங்களிலும் சிறந்த உணவு என்று சொல்லி விடமுடியாது.

## குடிநீர்

பல இடங்களில் தண்ணீர் ஏராளமாக கிடைததாலும, நமது உடல நலத்தில் பெரும்பங்கு வகிக்கும். அதற்குப் போதுமான முக்கியத்துவத்தை நாம் அளிப்பதில்லை. நல்ல உடல் நலத்திற்கு சுத்தமான குடிநீர்தான் முதல் தேவை. குடிநீர் சுத்தமாயில்லாததால், வயிற்றுப் போக்கு (டயறியா) மற்றும் அதனுடன் தொடர்புடைய இதர நோய்களால் பாதிக்கப்பட்டு பல குழந்தைகள் இறந்துவிடுகின்றன. இன்னும் பத்தாண்டுகளுக்குள் உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் போதுமான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்குமென்று நம்பப்படுகிறது.

## கல்வி

சமுதாயத்திலுள்ள யாவருக்கும் நல்ல முறையில் கல்வி கற்பிக்கப்படும் போது அவர்கள் பெருமளவு உடல் நலமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். மேலும், கற்றவர்கள் தமது உடல் நலம் குன்றாமலிருக்க அத்தியாவசியமான நோய்த்தடுப்பு, பேறு காலத்திற்கு முற்பட்ட மருத்துவக் கவனிப்பு ஆகியவற்றை ஏற்ற விதத்தில் பயன்படுத்திக்கொள்கிறார்கள். ஒரு நாட்டில் அல்லது மாநிலத்தில் காணப்படும் கல்வித் தரம் அவற்றின் முன்னேற்றம் மற்றும் மக்களின் ஆரோக்கிய நிலை ஆகியவற்றை நன்கு விளக்கத் துணைபுரிகிறது.

நம்மிடையே, கல்வியில் ஒரு பால் சார்பு மிகுந்து காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, பெண்களைவிட ஆண்கள் அதிகமான எண்ணிக்கையில் கல்வி பயிலுகிறார்கள். பெண்கள் அதிகமாகக் கல்வி பயிலுமிடங்களில் சமூகம் மிகவும் ஆரோக்கயத்துடன் காணப்படுகிறது. அப்படிப்பட்ட இடங்களில் குறைவான குழந்தைப பிறப்பே உள்ளது; அத்துடன் குறைவான இறப்பே காணப்படுகிறது. உடல் நலம் அற்றவர்களும் விரைவிலேயே சிகிச்சையை நாடுகிறார்கள். மற்றும் அங்குள்ள மக்கள் யாவரும் ஆரோக்கியமாயிருக்கவே எப்போதும் விரும்புகிறார்கள்.

அதிகமாயுள்ள கல்வியறிவின்மைப் பிரச்சினையை வெற்றிகொள்ளவும், கல்வியில் உள்ள ஒருபால் சார்பை பெண்களுக்குச் சாதகமாக மாற்றவும், முதியோர் கல்வித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை பெறத் தவறிய சமுதாய முன்னேற்றத்தை எட்டிப்பிடிக்க இது ஒரு முயற்சியாகும். முதியோர் கல்வி மக்களின் மனப்பான்மையையும், பழக்கவழங்கங்களையும் மாற்றி நல்லாரோக்கியத்துக்கு உறுதியளித்துள்ளது என்பதற்கு போதுமான அநேக சான்றுகள் காணக்கிடக்கின்றன.

## உறைவிடம்

ஒவ்வொருவருக்கும் சொந்தமாக ஒரு வீடு இருப்பது நல்லாரோக்கியத்துக்கு சாதகமாக அமைகிறது வீட்டின் அமைப்பு அதில் உள்ள அறைகளின எண்ணிக்கை , அணியும் உடைகளின் வகை, வானெலி, மிதி வண்டி, மின்சாரம் ஆகியவற்றைப் பயன்படுத்தும் அளவு எல்லாமே நல்ல உடல் நலத்துடன் இருப்பதறகுச் சாதகமான அமைகின்றன.

## தொடர்பு வாயில்கள்

செய்தி மற்றும் போக்குவரத்து தொடர்புகள் உடல் நலம் காப்பதில் மிக முக்கிய பங்கேற்கின்றன. இவை கிட்டாத தொலை தூரப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு மருத்துவச் சேவையின் பயன்கள் மறுக்கப்படுகின்றன. மேலும் தேவைப்பட்ட சமயத்தில் நகர் புறங்களில் தாராளமாகக் கிடைக்கும் மருத்துவ வசதிகளையும் அவர்களால் பயன்படுத்திக் கொள்ளமுடிவதில்லை. செய்தித் தொடர்புகள் மக்களின் சமூக அந்தஸ்தை உயர்த்துகின்றன. தொழில போட்டி - வியாபாரப் போட்டி மகுந்த உலகில் நல்ல போக்கு வரத்து வசதிகள் அதிகப்படியான வருவாய் ஈட்ட மக்களுக்கு உதவுகிறது.

## தொழிலும் வருவாயும்

பணம் இருந்தால் மட்டுமே மேற்சொன்ன காரணிகள்யாவும் தடையின்றிக் கிடைக்கும். ஒழுங்கான வருவாய் தரக்கூடிய, நல்ல - பாதுகாப்பான வேலை மக்களை உடல நலம் உடையவர்களாக்கப் பெரிதும் துணைபுரிகிறது. துரதிர்ஷ்டவசமாக பலர் தம்வருவாய் முழுவதையும் புகைக்கவும், குடிக்கவும் செலவிட்டு விடுகிறார்கள். அதன் விளைவாக அவர்களுடைய குடும்பமும், குழந்தைகளும் துன்பத்தில் உழல்கின்றனர். கெட்டவழிகளிலும், பிறரை ஏமாற்றியும் இருமடங்காகக் கிடைக்கும் பணத்தைவிட நல்ல வழிகளில் நேர்மை

**டாக்டர் இராஜரத்தினம்**

யோடு சிறுகச் சிறுக கஷ்டப்பட்டு சேர்க்கும் பணம் எவ்வளவோ மேலானதாகும்.

## முழு மனிதன்

மேற்கண்டயாவும் ஒவ்வொரு மனிதனின் குணங்களிலும் மேம்பாடு தேவை என்பதையே சுட்டிக் காட்டுகின்றன. தனி மனிதனின் மேம்பாடு, உடல் - மன - சமுதாய ஆன்ம பருப்பொருட்களின் மேம்பாட்டுடன் தொடர்புடையதாயிருக்கிறது. அதனால் தானோ என்னவோ, உலக சுகாதார நிறுவனமும் (WHO) அதைக் கீழ்கண்டவாறு விளக்கிக் காட்டுகிறது.

"ஆரோக்கியம் என்பது உடல், மனம் மற்றும் சமுதாய நலனில் முழுமையடைந்திருத்தல் ஆகும். நோய்கள் இல்லாமல் இருந்து விட்டால் மட்டும் போதாது..." பல்வேறு மருத்துவ சேவை புரியும் ஊழியர்களும் இத்துடன் இன்னொன்றையும் சேர்க்க விழை கின்றனர். அதாவது; "ஆன்ம நலமும்" கூட ஒவ்வொரு தனி மனிதனின் மேம்பாட்டிற்கும் உறுதியளிப்பதாயிருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். □

# சோனியா வெளிநாட்டவர் என்ற கருத்துக்களைத் தவிர்க்கவும்

## வெங்கைய நாயுடு

(சென்னை)

வெளிநாட்டைச் சேர்ந்தவர் இந்தியாவில் உயர் பதவி வகிக்கக் கூடாது என்று ஏற்கெனவே தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றிருந்த போது கூறிய தி.மு.க, பா.ம.க, ம.தி.மு.க.கட்சிகளும் தேசியவாதக் காங்கிரஸ் கட்சியும் இந்த நிலையிலிருந்து தடம் புரண்டது ஏன் என்பதற்கு காரணத்தை பா.ஜ.க.தலைவர் வெங்கைய நாயுடு மீண்டும் வினவியிருக்கிறார்.



இதய அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள சென்னை வந்திருந்த 20 இராக்கியக் குழந்தைகளுக்கு இதய நோய்க்கான சர்வதேச மையத்தில் அறுவைச்சிகிச்சை முடிந்து பூரண குணமடைந்தனர் அவர்களைத் தாங்கள் சொந்த நாட்டிற்குள் வழி அனுப்பும் விழா முகப்பேரில் நடைபெற்றது. விழாவில் நடிகர் கமஹாசன் கலந்துகொண்டார்.

சென்னையில் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், காங்கிரஸ் கட்சியிடம் கைமாறு கருதியே இந்தக் கட்சிகள் தங்கள் நிலையை மாற்றிக் கொண்டுள்ளன என்றார்.

சோனியா காந்தி பற்றித் தரக் குறைவாக பா.ஜ.க.உறுப்பினர் ஒருவர் பேசினார் என்ற குற்றச் சாட்டுக்குப் பதிலளித்த அவர், காங்கிரஸ் தலைவர்களும் மற்றவர்களை விமர்சிக்கும் போது தன்டைக்கத்தையும் கண்ணியத்தையும கடைப்பிடிக்கவில்லை என்றார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காநதி பற்றி உத்தரப் பிரதேச பா.ஜ.க. தலைவர் தினேஷ்கத்தியா தனிப்பட்ட முறையில் வெளியிட்ட கருத்துக்கள் தங்களுக்கு ஏற்புடைய தலல என்றும், எதிர்காலத்தில் இது போன்ற கருத்துக்களைத் தவர்க்கும்படி அவருக்கு ஆலோசனை கூறுவதாகவும் பி.ரி.ஐ. நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் வெங்கைய

# பா.ஜ.க. வெற்றிக்குப் பிரசாரம் செய்வேன்

## ஆலடி அருணா

(சென்னை)

தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகுவதற்கு தி.மு.க எடுத்த முடிவு கட்சியின் செயற்குழுக கூட்டத்திலோ, பொது குழுக் கூட்டத்திலோ எடுக்கப்பட்டவில்லையென்றும் இந்த முடிவு சட்ட ரீதியான முறையானதல்ல என்றும் தி.மு.க.விலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஆலடி அருணா கூறியிருக்கிறார்.

நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தி.மு.க.வின் பரம்பரை ஆட்சிக்கு முடிவு ஏற்பட்டவுடன் தான் மீண்டும் அக் கட்சியில் சேர்ந்து கொள்வதாகக் கூறினார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மகன் மு.க.ஸ்டாலின் கட்சியின் தலைமைப் பொறுப்பையும் முதலமைச்சர் பொறுப்பையும் ஒருங்கே ஏற்றுக் கொள்வதற்கு வசதியாக தயார்ப்படுத்தப்பட்டு வருவதாக ஆலடி அருணா குற்றஞ்சாட்டினார்.

மக்களவைத் தேர்தலுக்குப் பின வாஜ்பாய் பிரதமராவது உறுதி எனத தெரிவித்த ஆலடி அருணா, இதன் மூலம் வெளிநாட்டில் பிறந்த சோனியா காந்தி பிரதமராவது தடுக்கப்பட்டுள்ளது என்றார்.

மக்களவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்காகப்பாடுபடப் போவதாகவும், தி.மு.க வேட்பாளர்களுக்கு எதிராக பிரசாரம் செய்யப் போவகாக அவர் கூறினார். (சு)

**இந்தியச் செய்திகள்**

# யாழ்.பல்கலையில் 23ஆவது பட்டமளிப்புவிழா
# 1314 மாணவர்கள் பட்டங்களைப் பெறுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தின் 23 ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

ஆறு அமர்வுகளாக நடைபெறவுள்ள இப்பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்து 314 பேர் பட்டம் பெறவுள்ளனர்.

முதலாவது அமர்வு மு.ப.9.00 மணிக்கும், இரண்டாவது அமர்வு மு.ப. 10.30 மணிக்கும், மூன்றாவது அமர்வு மு.ப.11.30 மணிக்கும், நான்காவது அமர்வு பி.ப.1.30 மணிக்கும், ஐந்தாவது அமர்வு பி.ப.3.00 மணிக்கும், ஆறாவது அமர்வு மாலை 4.30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளது.

இப் பட்டமளிப்புவிழாவில் யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர். ரி.ஜெயரட்ணம், நடிகமணி வி.வி.வைரமுத்து, கலாசூரி என்.கே.பத்மநாதன் ஆகிய மூவருக்கும் கௌரவ கலாநிதிப்பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.


தொடர்ந்து இப்பட்டமளிப்பு விழாவில் 1311 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர். அப்பட்டங்களின் பெயர்களும் அவற்றைப் பெறுவோரின் எண்ணிக்கையும் பின்வருமாறு,

தத்துவ கலாநிதிப்பட்டம் - 2பேர், தத்துவ முதுமாணிப்பட்டம் - 12 பேர், முதுகலைமாணிப்பட்டம் - ஒருவர், கல்விமுதுமாணிப்பட்டம் - 40 பேர்,பட்டப்பின்படிப்பு கல்விடிப்ளோமாப்பட்டம் - 113 பேர், பொது நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமாப்பட்டம் 22 பேர், கலைமாணிப்பட்டம் 311 பேர், கலைமாணிப்பட்டம் (வவுனியாவளாகம்)-23 பேர் , கலைமாணிப்பட்டம் (வெளிவாரி)- 8 பேர், நுண்கலைமாணிப்பட்டம் சித்திரமும் வடிவமைப்பும் -30 பேர், நுண்கலைமாணிப்பட்டம் (வாய்ப்பாட்டு)-32 பேர், நுண்கலை மாணிப்பட்டம் (வயலின்)- 5 பேர், நுண்கலை மாணிப்பட்டம் (வீணை) 2 பேர் , நுண்கலைமாணிப்பட்டம் (பரதநாட்டியம்)- 59 பேர், நுண்கலை மாணிப்பட்டம் (சங்கீதம் - வெளிவாரி) 7 பேர், நுண்கலைமாணிப்பட்டம் (நடனம் வெளிவாரி)-10 பேர், வியாபார நிர்வாக மாணிப்பட்டம் - 65 பேர், வியாபார நிர்வாக மாணிப்பட்டம (வவுனியா வளாகம்) -26பேர், வர்த்தக மாணிப்பட்டம் - 48 பேர், வர்த்தக மாணிப்பட்டம் (வெளிவாரி) 33 பேர், மருத்துவமாணிப் பட்டம் மற்றும் சத்திரசிகிச்சைமாணிப் பட்டம் - 158பேர், விஞ்ஞானமாணிப் பட்டம் - 126 பேர், விவசாய விஞ்ஞானமாணிப்பட்டம் - 16 பேர், விஞ்ஞானமாணி (வவுனியா வளாகம்) - 21 பேர், சித்தமருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை மாணிப்பட்டம் - 23 பேர், சமூக சுகாதார டிப்ளோமாப் பட்டம் - 6 பேர், நாட்டிய டிப்ளோமாப் பட்டம் (பரதநாட்டியம்)- ஒருவர், சங்கீத டிப்பிளோமாப்பட்டம் (வாய்பாட்டு) - 6 பேர், மீன்பிடியியல் டிப்ளோமாப்பட்டம் -54 பேர், சங்கீத டிப்பிளோமாப்பட்டம் (வயலின்) - ஒருவர், சங்கீத டிப்பிளோமாப்பட்டம் (மிருதங்கம்) - ஒருவர். உடற்கல்வி டிப்ளோமாப்பட்டம்- 45பேர், விஞ் ஞான டிப்ளோமாப்பட்டம் - 4 பேர்.(உ-4,16)

# ஸ்ரீ.சு.க -ஜே.வி.பி தேர்தல் கூட்டின்
# இலக்கு ஆட்சியமைப்பது மட்டுமே
## பிரதமர் ரணில் பரிகாசம்

(கொழும்பு)

எதிர்வரும் 13 வது பாராளுமன்ற



பொதுத் தேர்தல் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி யும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பேரில் இந் தேர்தலில் போட்டியிடுகிறது. என பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி பெல் மதுளையில் நேற்று முன் தினம் நடாத்திய தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றிலேயே பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

தேவை அற்ற நேரத்தில் தேர்தல் ஒன்றை நடத்தும் ஜனாதிபதி சந்திரிகா மக்களின் ஆணையைக் கோருவதற்காகவே இத் தேர்தலை நடத்துவதாகக் கூறிவருகிறார்.

நாட்டின் எதிர் காலத்தை அஷ்த புர்ஸ்டியுடன் கூடிய அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கு ஆட்சிக்கு வரும் அரசியல் கட்சிகளிடம் நன்மை பயக்கும் செயற்றிட்டங்கள் இருக்கவேண்டும். அத்தகைய திட்டங்கள் எதுவும ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் இல்லை. இக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள கொள்கைப் பிரகடனத்தில் கூட அத்தகைய செயற்றிட்டங்களை முன்வைக்கவில்லை என்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க சுட்டிக் காட்டினார். (ம)

# வட - கிழக்கு சுகாதாரத் தொண்டர்களை
# வேறு பணிகளில் நிரந்தரமாக்கக் கோரிக்கை

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கில் உள்ள சுகாதரத் தொண்டர்களை வேறு பணிகளில் நிரந்தரமாக்க அல்லது தற்காலிக நியமனங்களில் சேர்த்துக்கொளள விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகம், மாகாண சுகாதார சேவைகள் ஊடாக வடக்கு - கிழக்கு சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும்,

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் யுத்த காலங்களில் பல வைத்திய சாலைகளிலும், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் நிரந்தர பணியாளர்களுக்கும் மிகுந்த பற்றாக்குறை நிலவிய காரணத்தினால் அங்கு நோயாளர்களைப் பராமரிப்பதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதேவேளை, மாவட்டங்களின் சுகாதாரத் திணைக்களத் தலைவர்களினதும், அரச அதிபர்களின் ஒப்புதலுடனும் மற்றும் எமது ஒத்துழைப்புடனும் சில அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடனும் சுகாதார வைத்திய சேவையில் பல வழிகளிலும் நின்று உதவக் கூடிய வகையில்சுகாதாரத் தொண டர்களை எடுத்து பயிற்சிகள் வழங்கப்பட்டன.

குறிப்பாக 1995 ஆம் ஆண்டில் இருந்து கொடுப்பனவுகள் கூட சரியாக வழங்கப்படாமல் இவர்கள் இரவுபகலாக உற்சாகத்துடன் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் குணப்படுத்தலிலும், வருமுன் காத்தலிலும் உள்ள வைத்தியர்கள் மற்றும் முக்கிய பணியாளர்களுக்கு முதுகெலும்பாக உள்ளனர் என்பதையும் இங்கு குறிப்பிடலாம்.

மருத்துவ மாதுக்களின் பற்றாக்குறை இருந்தபோதெல்லாம் இவர்களின் பணி இன்றியமையாததாக இருந்து கொண்டிருக்கின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட காலத்தில் இருந்து தங்களுக்கு ஊடாகவும், இங்கு பலமுறைகள் வந்த வேளைகளிலும் சுகாதார அமைச்சின் செயலாளர் அவர்களிடமும் மற்றும் தங்களிடமும் வடக்கு - கிழக்கின் சுகாதார அபிவிருத்திக்கு ஆலோசகராக இருக்கும் பொறுப்பதிகாரியுடனும் இந்த சுகாதார தொண்டர்களை அவர்களின் வாழ்வாதரத்திற்கு அவர்களின் தகுதியின் அடிப்படையில் நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டியிருந்தோம்.

இத் தொண்டர்களும் தங்களை நிரந்தரமாக்குமாறு பலமுறை கடிதங்கள் வாயிலாகவும் அமைதியான பேராட்டங்களின் வாயிலாகவும் தெரியப்படுத்தியிருந்தனர். தற்போது வடக்கு - கிழக்கில் வைத்தியர்கள் உட்பட ஏனைய பணியாளர்களின் பற்றாக்குறை மிக அதிகமாக இருப்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

அண்மையில் பலருடைய வேண்டுகைக்கு அமைவாக க.பொ.த (சா/த) இல் குறிப்பிட்ட சித்திக்கு அமைவாக மருத்துவ மாது பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச்செய்யவுள்ளதாக அறிகிறோம். அதில் இவர்களுக்கு முன்னுரிமை அளிப்பீர்கள் எனநம்புகின்றேன் என்றுள்ளது.

(உ)

## அமெரிக்கப் பிரதித் துணை
# வெளிவிவகார அமைச்சர்
# இவ்வாரம் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதித் துணை வெளிவிவகார அமைச்சர் டோர்கெல் பற்டோர்ன் இவ் வாரம இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் தனது இலங்கை விஜயத்தின் போது, அரச தலைவர்கள், அரசியற் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடதீது வாரென அமெரிக்க தூதரகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001 - 2002 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஜப்பானுக்கான அமெரிக்கத் தூதுவரின் சிரேஷ்ட ஆலோசகராகவும், பின்னர் ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பாதுகாப்புச் சபையின் தலைவர், சிரேஷ்ட பணிப்பாளர் ஆகியோருக்கான விசேட உதவியாளராகவும் பணியாற்றியதுடன் வேறு பல பொறுப்பு வாய்ந்த பதவிகளையும் இவர் வகித்திருக்கின்றார்.

அமெரிக்க கடற்படைக் கல்லூரியில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த இவர், ஒரு ஓய்வு பெற்ற கடற் படை அதிகாரியுமாவார். (உ)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் .அரியாலை ஸ்ரீஞான வைரவர் தேவஸ்தான புனராவர்த்தன கும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை இடம் பெறவுள்ளது. (உ)

## சர்வதேச பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 127 வது பிறந்த தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதி புதன் கிழமை தந்தை செல்வா நினைவாலயத்தில் சர்வமதப் பிரார்த்தனை இடம் பெறவுள்ளது.

தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ் .ஜெபநேசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-16)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார வைத்திய அமைச்சினால், யாழ்.மாவட்டத்தில் முதன் முதலாக கரவெட்டியில் அமைக்கப்பட்டுள்ள ஆயுள்வேத மத்திய மருந்தகத்தின் திறப்பு விழா இன்று திங்கட் கிழமை மு.ப.10.00 மணிக்கு இடம் பெறவுள்ளது. (உ-18)

## மத்திய குழு உறுப்பினர்தெரிவு

(வவுனியா)

வவுனியா தெற்கு வலய முன் பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் மத்திய குழு உறுப்பினர்கள் தெரிவு அண்மையில் கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசபாதம் தலைமையில் வவுனியா சுத்தனந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

மத்திய குழுவின் தலைவராக எஸ்.கணேசபாதமும், உபதலைவராக. எஸ்.கமலாவும், செயலாளராக பூ.புஸ்பராணியும், உப செயலாளராக எஸ்.ஜயவீரவும், பொருளாளராக எஸ்.எம்.ஜாபீரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (18)

## ஸ்ரீராம நவமி திருவிழா

(தும்பளை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு ஸ்ரீராமநவமி திருவிழா விஷேட பூசை வழிபாடுகளுடன் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் ஆயிரத்தெட்டு சங்குளால் அபிஷேகம் இடம் பெற்று, நண்பகல் சுவாமி வீதியுலா வருதலுடன் மகேஷ்வர பூசையும் இடம பெறவுள்ளது. (உ-24)

# தியாகத்தைக் கொச்சைப்படுத்தும் கருணா ஆதரவு அணியினர்
## பொதுமக்கள் பெரும் அதிருப்தி

(பிரிட்டன்)

தியாக தீபம் அன்னை பூபதி நினைவாக நடத்தப்பட்ட நினைவுப் பேரணியை கருணா ஆதரவுப் பேரணியாகவும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ரேணியாகவும் மாற்றும் முயற்சியில் கருணாவின் ஆதரவாளர்கள் ஈடுபட்டிருப்பதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

அன்னை பூபதியின் நினைவாக மட்டக்களப்பில் இடம்பெற்ற இப்பேரணியை விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவின் ஆதரவாளர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயன்றமை குறித்து பேரணியில் கலந்து கொண்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கருணா ஆதரவாளர்களது இச் செயற்பாட்டிற்கு லண்டன் பி.பி.சி ஊடக நிறுவனம் உட்பட பல உள்ளூர் ஊடக நிறுவனங்களும் துணை போயுள்ளதாக மக்கள் தரப்பில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. (உ-64,4)

## மீளக் குடியமர்ந்த
# 3 ஆயிரம் குடும்பங்களுக்கு
# புனர்வாழ்வு நிதி ஒரு இலட்சம்

(கொழும்பு)

புத்தளம், அனுராதபுரம், பொலநறுவை, மொனராகலை மாவட்டங்களிலுள்ள மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு, பிரதமரின் பணிப்பின் பேரில் புனர்வாழ்வு, புனரமைப்பு ஆணையாளரினால் நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளன

இத்திட்டத்தின் கீழ் 2002 பெப்ரவரி 22 இன் பின் தமது சொந்த இடஙகளுக்கு திரும்பிய ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 25 ஆயிரம ரூபா வழங்கப்படவுள்ளதுடன் அவர்களது வீடுகளை புனரமைப்பதற்காக குடும்பத்திற்கு 75 ஆயிரம் ரூபா வழங்கப்பட விருக்கிறது.

இவ் உதவிகளைப் பெறுவதற்கு கிட்டத்தட்ட 3 ஆயிரம் குடும்பங்கள் தகுதி பெற்றுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமரின் அறிவுறுத்தலின் பிரகாரம் உலக வங்கியுடன் நடாத்திய பேச்சுக்களின் பின்னரே இத் திட்டத்தினை அமுல் படுத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய மாவட்டங்களின் பிரதேச செயலகங்களூடாகவும், மாவட்ட பரதேசங்களினூடாகவும் இவ்வுதவிகள் வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

உதவி பெறும் குடும்பங்களைத் தெரிவு செய்வதற்காக பிரதேச செயலக மட்டத்திலான குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மேற் கூறிய மாவட்டங்களின் பிரதேச செயலகங்களிற்கும், மாவட்ட செயலகங்களிற்கும் திட்டத்தினை அமுல் படுத்துவது தொடர்பான சுற்றறிக்கைகள் பிரதமரின் செயலாளரும் புனர்வாழ்வு, புனரமைப்பு ஆணையாளர் நாயகமுமான பிரட்மன் வீரக்கோனின் பணிப்பின் பேரில் வழங்கப்பட்டுள்ளன.(உ-6)

# கருணா குறித்த சலசலப்பு சில தினங்களில் ஓய்ந்துவிடும்

## இளம்பரிதி தெரிவிப்பு

(பொன்னாலை)

வரலாறறின்படி இலங்கைத் தீவில் இரணடு தேசங்கள் இருந்து கொண்டிக்கின்றன. ஒன்று தமிழர்



தேசம், மற்றையது சிங்களவர் தேசம், ஆங்கிலேயர் ஆட்சிசெய்து வெளியேறியபோது ஒற்றையாட்சி முறைமையின்கீழ் இந்நாட்டை சிங்களவரிடம ஒப்படைத்துச் சென்றனர். அன்றிலிருந்து தமிழ் மக்களாகிய நாம் அரசியல் ரீதியாக அடிமையாக்கப்பட்டோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம் பரிதி தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் ஆலய முன்றலில் நடைபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இவ்வாறு அடிமைகளாக்கப்பட்ட தமிழர்கள் அன்றிலிருந்து இன்று வரை சிங்களப் பேரினவாத ஆட்சிக்கெதிராக போரிட்டுக்கொண்டே வருகின்றார்கள். தந்தை செல்வா எமது மககளுடைய உரிமைப் போரை அரசியல் மூலம், அஹிம்சை வழிப்போராட்டங்கள் மூலம் முன்னெடுத்திருந்தார். ஆனால் அவை யாவும் அரசபடைகளின் ஆயுத பலங்களால் அடக்கி ஒடுக்கப்பட்டன, முறியடிக்கப்பட்டன. அப்போது அவர் குறிப்பிட்டார். தமிழர்களுடைய பிரச்சினைக்குத் தன்னாட்சியுள்ள அதிகாரம்தான் ஒரே வழி. அதைப் பெறுவதற்கு ஆயுதப் போராட்டம் அன்றி வேறுவழியில்லை என்றார்.

அதன்பின் இந்த இடத்திலே நடந்த தீர்மானத்தின் மூலம் அது நிறைவேற்றப்பட்டது. 1977இல் நடந்த தேர்தல் மூலம் மக்கள் இதற்கு ஆணை வழங்கினர். மக்களுக்காக மககளால் முன்னெடுத்துச் செல்லப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த விடுதலைப் போராட்டத்தை எமது தலைவர் பொறுப்பெடுத்து நெறிப்படுத்திவருகினறார்.

இந்த விபரம் செறிந்த போராட்டத்திலே மக்களுடைய பங்களிப்புகளும் உழைப்புக்களும் நமது வீரர்களுடைய தியாகங்களும் எமது தலைவருடைய உறுதியான முன்னெடுப்பும் இன்று இலங்கைத் தீவில் அழிக்கமுடியாத சக்தியாக தமிழரை ஆக்கிஇருக்கின்றது.

புலிகளைப் பொறுத்தவரையில் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் தாம் நினைத்ததைச் சாதிப்பார்கள், சாதிக்கமுடியும். ஆனால் ஸ்ரீலங்கா இராணுவத்தைப் பொறுத்தவரையில் நினைத்த இடததில் நினைத்ததைச் சாதிக்க அவர்களால் முடியாது.

ஒரு இனம் கௌரவத்துடனும் உரிமையுடனும் வாழவேண்டுமனால் அடிப்படையானது தேசியம். இன்று அந்தத் தேசியத்தை நாம் நிறுவியிருக்கின்றோம்.

இன்று ஒரு வித்தியாசமான துரோகத்தனம் இழைக்கப்பட்டுள்ளது. கிழக்கில் கருணாவின் துரோகத்தனத்தினால் ஏற்பட்ட நெருக்கடி இன்னும் சில தினங்களுக்குள் தீர்ந்துவிடும். கிழக்கு மாகாண மக்களும் போராளிகளும் எமது நிலைப்பாட்டை விளங்கிக் கொண்டுள்ளனர்.

எமது இயக்கத்தில் சகலரும் ஒழுக்கத்துக்கு கட்டுபட்டே நடக்க வேண்டும். ஒழுக்காற்று விதிகளை மீறுகின்றபோது கடுமையான தண்டனைகளை அளிப்பது உங்களுககுத் தெரியும். கருணா இன்று தனது தவறுகளை நியாயப்படுத்தி தப்பிக்கொள்ள முயற்சிக்கின்றார். எமது போராட்ட வரலாற்றிலே என்றும் இல்லாதவாறு பிரதேச வாதத்தை புகுத்தி வருகிறார்.

இன்று அவருக்கு கீழ் இருந்து செயற்பட்ட தளபதிகள் பலர் அவரின் தலைமையை ஏற்க மறுத்து எமது தேசியத் தலைவரின் கொள்கையை ஏற்று செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என்றார்.

(உ-49)

## மாணவனின் கைமுறிந்தது

(காரைநகர்)

மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியை ஒட்டி இடம்பெற்ற உயரம்பாய்தலில் பங்குபற்றிய மாணவன் ஒருவன் கைமுறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இச் சம்பவம் காரைநகர் இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, காரைநகர் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான தெரிவுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் போது உயரம்பாய்தல் போட்டியில் பங்குபற்றி பாயும் போது கல்லூரி மாணவனான சந்திர சேகரன்-ரமேஸ் கைமுறிந்து காரைநகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-246)

## வைத்தியர் நியமனம்

(கந்தர்மடம்)

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்குப் புதிதாக வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீணடகாலமாக மேற்படி வைத்தியசாலைக்கு ஒரு வைத்தியர் மட்டுமே நியமிக்கப்பட்டிருந்தார். இதனால் இங்கு நிலவிவந்த வைததியர்கள் பற்றாக்குறையால் நோயாளர்கள் பல அசௌகரியங்களை எதிர் கொணடனர். இதனைக் கருத்தில் கொண்டே இவ் வைததிய சாலைகது கடந்த வ்யாழன்று புதிய வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(உ-112)

## கிரிக்கெற் ரசிகரின் சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ். பரியோவான் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெற் போட்டியைப் பார்வையிடச் சென்ற இரசிகா ஒருவான் துவிச்சக்கர வண்டி களவாடப்பட்டுள்ளது.

மானிப்பாயைச் சேர்ந்த எஸ். ஜெயாகரன் என்பவரின் துவிச்சக்கர வண்டியே இவ்வாறு களவு போயுள்ளது.

இது தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-122)

## கூட்டமைப்பை ஆதரிப்பது தமிழினத்தின் தார்மீக கடமை

### விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா

(யாழ்ப்பாணம்)

தமிழினத்தின் விடுதலை வேட்கையினை உலகமறியச் செய்த விடுதலைப்புலிகளின் கொள்கையின் அடிப்படையில் போட்டியிடும் தமிழத் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்க வேண்டியது தமிழ் மக்களின் தார்மீகக்கடமை என தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்துள்ளார்.

அண்மையில் நலலூரில் இடம் பெற்ற முக்கிய கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் இடம் பெற்றுவந்த தேர்தல்களை தமிழ் மக்கள் பகிஷ்கரித்தே வந்துள்ளனர். ஆனால் இம்முறை இடம் பெறவுள்ள தேர்தலில் ஒட்டுமொத்த தமிழர்களும் ஆர்வமுடன் வாக்களிக்கவுள்ளனர். இதனால் சர்வ தேச சமூகம் தமிழனத்தின் எதிர் பார்ப்புக்களை உணர்ந்து கொள்ளும் ஒரு களமாகவே எதிர்வரும் தேர்தல் களத்தை நோக்குகிறது.

தலைவர் பிரபாகரன் எத்தனை பெரிய தடைகளையும் தாண்டி தமிழினத்திற்கு விடிவினைப் பெற்றுத்தரத் தயாராக உள்ளார். அவரது சிந்தனைப்படி எதிர்வரும் தேர்தலில் தமிழ்ந் தேசியக்கூட்டமைப்பிற்கு விடுதலைப்புலிகள் தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

எனவே எதிர்வரும் தேர்தலில் மக்கள் கூட்டமைப்பினர்க்கு வழங்கும் ஆதரவு விடுதலைப்போராட்டத்தின் தன்மையை வலுப்படுத்தும் எனவே எதிர்வரும் தேர்தலில் மக்கள் எடுக்கும் தீர்மானமே, தமிழ் மக்களுக்குத் தீர்மானிக்கும் சக்தியைப் பெற்றுத்தரும் என்றார். (60,4,5,)

## அம்பாறை நோக்கிச் சென்ற வாகனத்தில் ஆயுதங்கள் மீட்பு

(அம்பாறை)

கொழும்பில இருந்து அம்பாறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வாகனம் ஒன்றில் இருந்து ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படையினரால் வநதாறு முனைப்பகுதியில் வைத்து மீட்கப்பட்ட இவ்வாயுதங்கள் துறைமுக அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வாகனம் ஒன்றிலிருந்தே மீட்கப்பட்டுள்ளது.

துறைமுக அபிவிருத்தி அமைச்சராக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீம் இருக்கின்றமையாலும் இவர் கிழக்கு மாகாணத்தைச சேர்ந்தவராக இருககின்றமையாலும் அவருக்கும் இவ் ஆயுதக் கடத்தலுக்கும் சம்பந்தம் இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இவ் ஆயுத மீட்புச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ-63,4)

## கொழும்பில் இருந்து சென்ற பஸ்ஸில் துணிகரக் கொள்ளை

கொழும்பில் இருந்து அக்கரைப்பற்று நோக்கிச்சென்று கொண்டிருந்த பஸ்வண்டி ஒன்று ஆயுதப் பாணிகளால் வழிமறிக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டிய கொலம்பகே ஆரப்பொல பகுதியில் வழிமறிக்கப்பட்டு பயணிகளிடம் இருந்து சுமார் 3லடசம் ரூபா பணமும் மற்றும் தங்க நகைகளுமே நேற்று முன்தினம் ஆயுதம் தாங்கிய குழுவினரால் கொள்ளையடிக்கப்பட்டதாக எம்பிலிப்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக் கொள்ளைச் சம்பவத்தில் 7பேர் அடங்கிய ஆயுதக்குழு வொன்று ஈடுபட்டதாகவும் இதுவரை கொள்ளையர் எவரும் கைதுசெய்யப் படவிலலை என்றும் விசாரணைகள் தொடர்வதாகவும் எம்பிலிப்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## கரணமடிக்கும் கருணா...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாமலிருப்பதற்கு பிரபாகரன் என்ற தனிநபர் காரணமாக இருப்பது.

திருமலை துறைமுகத்தை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாமலிருப்பது.

ஆசியப் பிராந்திய ஒரேயொரு வல்லரசாகத் திகழும் தன்னிடமே வாலாட்ட எத்தனிப்பது.

பார்ப்பனிய அமைப்புக்கள், ஊடகங்களின் அழுத்தம்.

இப்படி ஏராளமான காரணங்கள் பின்புலத்தில் இருப்பதால், இந்தியா தனது உளவுத்துறை மூலமாக இப்படியொரு நாசகார வேலையைச் செய்திருக்கலாம் என்று பலமான ஊகம் வெளியிடப்பட்டு வருகிறது.

எது எப்படியிருந்தாலும், யார் இந்த முயற்சியில் இறங்கியிருந்தாலும், காலமும் புறச்சூழலும் அவர்களுக்குக் கைகொடுக்காமற் போயிருப்பது சோகமான உண்மை.

கருணா பிரதேசவாதத்தைக் கிளப்பியபோது, உடனடியாக மதிமயங்கி நம்பிய கிழக்கிலங்கை மக்கள், தற்போது விழிப்புணர்வு பெற்று வருகிறார்கள். கிழக்கிலங்கை ஊடகங்கள் விழிப்புணர்வு பெறுகின்றன, கிழக்கிலங்கைப் போராளிகளும் தெளிவு பெறுகிறார்கள், கருணாவின் அழுத்தம் காரணமாக, அவரது சகோதரருடன் இணைந்து செயற்படும் ஒருசிலர் தவிர, ஏனையவர்கள் அனைவரும் கடுமையான மிரட்டலின் கீழேயே அங்கு தங்க வைக்கப்பட்டிருப்பது, தற்போதுவெளிவந்து கொண்டிருக்கின்றன.

அழுத்தமும், மிரட்டலும், பயமுறுத்தலும், பழிவாங்கலும், நிரந்தரமாக ஒரு கட்டமைப்பை செயற்படுத்த உதவப்போவதில்லை. இருபது வருடங்களுக்கும் மேலாக ஒரு நிர்வாகக் கட்டமைப்பை கடுமையாக உள்வாங்கி, எத்தனையோ எதிர்ப்புக்களுக்கெல்லாம் ஒற்றையாக முகம்கொடுத்து, இதுபோன்ற அச்சுறுத்தல்களையும் சவால்களையும் தனியனாக சந்தித்து, ஆயிரமாயிரம் மாவீரர்களின் ஆகுதியில் கட்டியெழுப்பப்பட்ட அசையாத கட்டுமானமே விடுதலைப் புலிகள் அமைப்பு. அந்த ஒன்றை இரண்டாக்க, பாரதத்தின் இராணுவப் படையால் கூட முடியாமல் போனது என்று நோக்கும் பொழுது, உளவுப்படையும், பணமும், புகழும் எம்மாத்திரம்!

அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சொல்லியிருப்பது போல், இது தற்காலிகமானதே. மழைக்கு முளைத்த காளான்களை பெருமழை அழித்து விடுவது போல, இந்தக் காளான்களும் கடுகதியில் காணாமல் போய்விடும்.

நன்றி: தமிழ்நாதம்.

## அரச ஊடகங்களுக்கு எதிராக ஐ. தே. மு. முறைப்பாடு

(கொழும்பு)

அரச ஊடகங்கள் தேர்தல் காலத்தில பக்கச் சார்பாகச் செயற்பட்டு வருவது தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணியும் ஜாதிக ஹெல உறுமயவும் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளன.

இந்த ஊடகங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதறகு தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரைத் தேர்தல் ஆணையாளர் நியமிக்க வேண்டும் எனவும் அவை கோரிக்கை விடுத்துள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின வேட்பாளர்களான விமல் வீரவன்ச மற்றும் ஜனதாச பீரிஸ் ஆகியோர் தினமும் அரச ஊடகங்களின் பணிப்பாளர்களைச் சந்தித்து அந்த ஊடகங்களில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படவேண்டிய விதம் குறித்து கலந்துரையாடி வருவதாகத் தமது குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ள ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் செனறத் கப்புக்கொட்டுவ இது சட்டவிரேதமான ஒரு நடவடிக்கை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரூபவாஹிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கரீம்பீரிஸ் சுயாதின தொலைக்காட்சி நிறுவனத் தலைவர் நீயூட்டன் குணதிலக, ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத் தலைவர் பரணவிதான ஆகியோர் இவ்வாறு தினமும் விமல்வீரவன்சவையும், ஜனதாச பீரிசையும் சந்தித்து உரையாடி வருவதாகவும் அவர் தமது குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ளார். (உ)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் யாழ். பிராந்தியத்தினரால் மலேரியா விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று கடந்த 19ஆம் திகதி யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நடத்தப்பட்டது.

இவ்விழிப்புணர்வுக் கருத்தரங்கில் லயன்ஸ் கழகத்தின் யாழ். பிராந்தியத் தலைவர் வைத்திய கலாநிதி வை.யோகேஸவரன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெய்வேந்திரன் ஆகியோர் உட்படப்பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மலேரியா நோய் பற்றிய பல்வேறு விடயங்கள் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது. (உ-4)

## இன்று ஒரு தகவல்

# இருக்கும் வரையில்

ஒரு அலுவலகம். அங்கு ஒரு தலைமை அதிகாரி அவர் மிகவும் உண்மையானவர், நேர்மையானவர். அலுவலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் மிகவும் பத்திரமாகப் பாதுகாத்து வந்தார். மேசை.,நாற் காலி, குப்பைக் கூடை எல்லாம் உரிய இடத்தில் இருக்கின்றதா என்று பார்த்துக் கொள்வார். நாற்காலியில் ஒரு கால் உடைந்திருந்திருந்தாலும் அதை உடனே பழுது பார்த்துச் சரி செய்து விடுவார்.

அதாவது அவர் எப்படியென்றால் அந்த அலுவலகத்தில் உள்ள ஒவ்வொரு பொருளையும் தனதாக எண்ணி பாதுகாத்து வந்தார். அந்த அதிகாரிக்குத் திடீரென்று ஒரு நாள் மாற்றல் உத்தரவு வந்தது. உடனே என்ன செய்கின்றார்? தனது பெட்டி படுக்கையைக் கட்டிக்கொண்டு புறப்படுகிறார்.

இப்போது அந்த அலுவலகத்தில் உள்ள மேசையைப் பற்றியோ, நாற்காலியைப்பற்றியோ அவர் கவலைப்படவில்லை. அந்த அலுவலகத்தில் இருந்த வரைக்கும் அங்கே இருந்த எல்லாப் பொருட்களுக்கும் அவரே பொறுப்பு. அதே விதமாக அவர் எல்லாவற்றையும் தன்னுடையதாகப் பாவித்து அக்கறையாய் கவனித்துக் கொள்கிறார். இதை மாரகம் என்பார்கள். அவரை அடுத்த ஊருக்கு மாற்றியவுடனே இதெல்லாம் தனதல்ல. சமுதாயத்தைச் சேர்ந்தது என்ற எண்ணம் வந்து விடுகிறது. தான் வெறும் பொறுப்பாளி மட்டுமே என்ற எண்ணம் உருவாகிவிடுகிறது. இதைக் காப்பாற்றுவது மட்டும் தான் என்கடமை என்ற எண்ணத்துடன் செயற்படுகிறார் இதுவும் மாரகம் தான்.

ஆனால் தாரகம் என்பதுபேறு. அதே அலுவலர் மாற்றலாகிப் போகும் போது வீட்டில் உள்ள எல்லாவற்றையும் கட்டி வாகனத்தில் ஏற்றுகிறார். பழைய, செருப்பு துடைப்பம் எதையும் விட்டுவைக்கவில்லை இதற்கு என்ன காரணம்? எல்லாம் என்னுடையது என்ற எண்ணம் ஆக எல்லாம் என்னுடையது என்ற எண்ணம் தாரகம் என்னுடையதில்லை என்ற எண்ணம் மாரகம்.

இந்தத் தாரகம், மாரகம் இரண்டிற்கும் இடையில்தான் மனித வாழ்வு ஊசலாடுகிறது என்பது பெரியோரின் கருத்து. எல்லாவற்றையும் நாம் அனுபவிக்கலாம் ஆனால் எதுவும் எனதல்ல என்ற எண்ணம் நமக்கு வரவேண்டும். இருப்பதெல்லாம் இறைவன் கொடுத்த பிரசாதம்.

அரசாங்கம் கொடுத்திருந்ததை அந்த அதிகாரி காப்பாற்றினார்.பொறுப்பில் உள்ளவரை எல்லாவற்றையும் காப்பாற்ற வேண்டியது தனது கடமை என்று நினைத்தார் அவர். அடுத்த ஊருக்குப்போ என்று சொன்னதும் எல்லாவற்றையும் உதறிவிட்டுக் கிளம்பிவிட்டார்.

இந்த உலகியல் கடமையை ஒரு யோகமாகச் செய்ய வேண்டும். இந்த உலகில் உள்ளவரைக்கும் என் வீடு, என் மனைவி, என் மக்கள் இது எல்லாமே இயற்கை அல்லது இறைவன் நமக்குக் கொடுத்துள்ள பிரசாதம் என்று உணர வேண்டும். அப்படிப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். எல்லாம் எனது என்ற மமகாரம் வந்து விடக் கூடாது. ஒரு மனிதனுக்கு எது நிரந்தரம்? எதுவரை இருக்கப் போகின்றான்? யாருக்கும் தெரியாது. அதனால் வாழும் வரை கடமையாற்றிக்கொண்டே காலம் கழிக்க வேண்டும். எல்லாம் இயற்கை தந்த வரப்பிரசாதம் என்ற பாவனையோடு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தக் காலத்து அதிகாரி ஒருவர் ஒரு லொறியில் ஏறிக கொண்டிருந்தார். "என்ன சார் விபரம்? என்று கேட்டார் அவரது நண்பர் ஒருவர். எல்லாம் என்னுடையது என்று நினைத்தேன் அதன்விளைவு இது" என்றார் அவர். என்ன அடுத்த ஊருக்கு மாற்றிவிட்டார்களா? என்றார் இவர். இல்லைசார் என்னைக் கைது செய்து அழைத்துக் கொண்டு போகின்றார்கள் என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நெதர்லாந்து இராஜதந்திரிகள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கொழும்பு)

நெதர்லாந்தின் இராஜதந்திரிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இச்சந்திப்பில் நெதர்லாந்து தூதுவராலயத்தின் முதன்மைச் செயலாளர் ஜான்கியூஸ்க்கன் முரண்பாட்டு ஆய்வுகளுக்கான பேராசிரியர் ஜோர்ஜ் எப். ப்ரேக்ஸ் மற்றும் இனமுரண்பாட்டு கற்கை நெறிக்கான பேராசிரியர் கலாநிதி கிறீஸ் வான் தர்போர்க் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுமார் ஒரு மணித்தியால்ம் வரை நடைபெற்ற இச்சந்திப்பில் இன்றைய அரசியல் சூழ்நிலை, இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கள் எதிர்வரும் பொதுத் தேர்தல், வடக்கு-கிழக்கு அபிவிருத்தி மற்றும் கிழக்கு மாகாண நிலமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (உ)

# விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை பாராட்டுகிறது பவ்ரல் அமைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பவ்ரல் அமைப்பு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு நிலையம் தமிழீழ விடுதலைப்புலிகளையும், இராணுவத்தினரையும் அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாகவும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வாக்களிப்பினைக் கண்காணிப்பதற்கு கண்காணிப்பாளர்களுக்கும் விடுதலைப்புலிகள் தடை எதனையும் விதிக்காது அனுமதித்திருப்பதும் பாராட்டுக்குரிது.

கடந்த தேர்தல் காலங்களில் நடந்தவற்றைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையாளர், இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வாக்குச்சாவடிகளை அமைப்பது தொடர்பாகப் பாதுகாப்புப் [illegible]டையினருடன் பேச்சு வார்த்தை நடத்திய பின்னரே இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்களை ஏற்படுத்தியுள்ளார்.

இந் நிலையில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேச மக்களின் உரிமைகளை மறுக்காமல் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை வழங்கியிருப்பதை வரவேற்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# நல்லாட்சியை ஏற்படுத்த நூறு நாட்கள் அவகாசம்

(கொழும்பு)

தேர்தல் முடிவடைந்து புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த நூறு நாட்களுக்குள் நாட்டில் நல்லாட்சியை-ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நல்லாட்சிக்கான பிரஜைகள் இயக்கம் சகல அரசியல் கட்சிகளையும் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றையும் அந்த இயக்கம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் ,

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கு சகல அரசியல் கட்சிகளும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஆட்சிக்கு வரும் எந்தவொரு அரசாங்கமாக இருந்தாலும் ஆட்சிப்பீடம் ஏறிய நூறு நாட்களுக்குள் நல்லாட்சியை நாட்டில் ஏற்படுத்தவேண்டும்.

அரசியல் யாப்பின் 17வது திருத்தத்தை அமுல் செய்வதில் காணப்படும் தடங்கல்களை நீக்குவதற்கு சகல கட்சிகளும் உதவுவதாக உறுதியளிக்க வேண்டும்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு எதுவித தடங்கலுமின்றிச் செயற்படும் வகையில் இலஞ்ச ஊழல் விசாரணை சட்டத்தை திருத்தி அமைக்கவேண்டும்.

மேலும், ஊழல்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சாசனத்தில் அரசியல் கட்சிகள் கைச் சாத்திடவேண்டும்.

தேர்தல் சட்டத்தைத் திருத்தி அமைத்தல் , சகல வேட்பாளர்களும் தங்கள் சொத்துக்களை பிரகடனம் செய்தல், தகவல் சுதந்திரம், பெண்களின் உரிமைகளை உத்தரவாதஞ் செய்வதற்கான சட்டம் ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும் என்று நல்லாட்சிக்கான பிரஜைகள் இயக்கம் கேட்டுள்ளது. (உ-60,10)

## இராசி பலன்

**22. 03. 2004**

**(பங்குனி 09, திங்கட்கிழமை)**

**சித்தம்**

**துதியை பின்னிரவு 05.58 மணிவரை**
**ரேவதி பின்னிரவு 12.31 மணிவரை**
**இராகுகாலம் 7.49-9.16 மணிவரை**
**சுபநேரம் 12.16-01.46 மணிவரை**

**மேடம்**
சுபசெலவு, உறவினர் சந்திப்பு, முயற்சிதாமதம், உணர்ச்சிவசப்படல்.

**இடபம்**
தனவரவு, கீர்த்தி, தொழில்முன்னேற்றம், குடும்ப நன்மை.

**மிதுனம்**
அதிகபிரயாசை, பிறர் உதவி, முயற்சி கைகூடும், சுபநிகழ்வு.

**கடகம்**
காரியதாமதம், அமைதிக்குறைவு, பிரயாணம், புதிய திட்டமிடல்.

**சிங்கம**
எதிர்பாராத பிரச்சினை, தொழில் கஷ்டம், தெய்வ சிந்தை, காரியதாமதம்.

**கன்னி**
பிரயாணநன்மை, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், தனலாபம்.

**துலாம்**
பகைவர்நேசம், தொழில்நன்மை, காரியசித்தி, நல்ல வரவேற்பு.

**விருச்சிகம்**
தெய்வசிந்தை, மனச்சஞ்சலம், காரியதாமதம், சொத்துப்பிணக்கு.

**தனுசு**
உஷ்ணவியாதி, தாய்வழி உறவு, காரியதாமதம், புதியவிடயம்.

**மகரம்**
தெய்வதரிசனம், தொழில்சிறப்பு, நல்லகாரியம், பொருள் சேர்க்கை.

**கும்பம**
வீண்வார்த்தை, தனவிரயம், காரிய அலைச்சல், அமைதிக்குறைவு.

**மீனம்**
ஜனவசியம், தனவரவு, பிரயாணம், நல்லமுயற்சி.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

**- வளவன்.**

# ஊடக நிறுவனத் தலைவர்களுடன் தேர்தல் ஆணையாளர் சந்திப்பு

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க சகல அரசாங்க மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் தலைவர்களையும் நாளை செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசவுள்ளார்.

இராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்தில் நடைபெறவிருக்கும் இச் சந்திப்பில், தேர்தல் ஆணையாளர் ஊடகங்களுக்கு ஏற்கனவே விடுத்துள்ள அறிவுறுத்தல்களை ஊடகங்கள் ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்கின்றனவா? என்பது பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, அரசாங்க ஊடகங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவாக நடந்துகொள்கின்றதாகவும், தனியார் ஊடகங்கள் ஐக்கியதேசிய முன்னணிக்கு ஆதரவாக நடந்துகொள்வதாகவும் மாறிமாறி குற்றஞ் சாட்டப்பட்டு வருவதைச் சுட்டிக்காட்டிய தேர்தல் ஆணையாளர், எந்தவொரு ஊடகங்களும் பக்கச் சார்பின்றி செய்திகளை வெளியிடவேண்டும் என்றும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். (உ-60,10)

# மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை ஐ.தே.மு. காப்பாற்றி வருகிறது தவிசாளர் மலிக் சமரவீர

(கொழும்பு)

அடுத்துவரும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அதே அளவு சம்பளமே அமைச்சர்களுக்கும் வழங்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

தொழில் நிபுணர்களை கடந்த வெள்ளிக்கிழமை தனது அலுவலகத்தில் வைத்து சந்தித்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் அங்கு பேசுகையில்,

நாட்டை முன்னேற்றப் பதையில் இட்டுச் செல்லும் வரை இந்த நடவடிக்கையை அமுல் படுத்துவதற்கு பிரதமர் தீர்மானித்துள்ளார்.

இதேவேளை, லஞ்சஊழல் விசாரணை ஆணைக் குழுவை செயற்படுத்துவதற்கு ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் கொண்டு வந்த திருத்தங்களுக்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இடமளிக்கவில்லை.

ஐக்கிய தேசிய முன்னணி ஒரு போதும் மக்களை ஏமாற்றவில்லை மக்களுக்கு அளித் வாக்குறிதிகளைக் காப்பாற்றியே வந்துள்ளது என்றும் அவர்மேலும் தெரிவித்தார். (உ-61.10)

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை

- குறள்

வலம்புரி

## மாறாத மனவடுவைத் தந்த வடக்கின் மாபெரும் போர்

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி - சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெற் போட்டியில் நடந்த சம்பவங்கள் யாழ். மக்களின் கௌரவத்திற்கு இழுக்கைத் தேடித்தந்துவிட்டது.

முன்ஏற்பாட்டுடன் நடைபெற்ற கிரிக்கெட்போட்டியின் முடிவு நேரத்தில் மைதானத்திற்குள் அத்துமீறி இறங்கியவர்கள் நடந்துகொண்ட முறையற்ற செயலினால் கிரிக்கெட் போட்டி குழம்பிப்போனது.

பிரபலமான - வரலாற்றுப் பெருமைமிக்க இரண்டு கல்லூரிகளும் இணைந்து வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் கிரிக்கெட்போட்டியை வருடாவருடம் மிகச்சிறப்பாக நடாத்தி, 2004இல் 100 ஆண்டுகளைப் பூர்த்தியாக்கி வெற்றிகரமாக இப்போட்டியை நடத்தியவேளையில் இடம்பெற்ற குழப்பமானது யாழ். மக்களின் மனங்களை மிக மோசமாகப் பாதித்துவிட்டது.

விளையாட்டுப்போட்டியென்பது மாணவர்களிடையே ஆளுமைப் பண்பைவளர்த்துவிடும் உன்னதமான நிகழ்வாகும். வெற்றியையும், தோல்வியையும் சமமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை ஏற்படுத்தி சவால்களுக்கு எதிர்நீச்சல் போடக்கூடியதான மனத்தைரியத்தை விளையாட்டுப்போட்டிகள் வழங்குகின்றன.

இவ்விளையாட்டுப் போட்டியில் இருக்கக்கூடிய சிறப்பம்சம் என்னவெனில், வெற்றியையும், தோல்வியையும் சமமாக ஏற்றுக்கொள்ளும் தன்மை விளையாட்டில் ஈடுபடுவோருக்கு மட்டுமன்றி பார்வையாளர்களுக்கும் ஏற்படுவதாகும்.

ஆனால், வடக்கின் மாபெரும் போரின் முடிவை ரசிகர்கள் ஆர்வத்தோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த வேளையில் - முடிவுகட்டத்தில் மைதானத்திற்குள் குதித்தவர்கள் ஏற்படுத்திய குழப்பம் எதற்காக என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது.

கிரிக்கெட்போட்டியை வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் நேரடி வர்ணனை செய்து ஒலி, ஒளி பரப்பிக்கொண்டிருந்த வேளையில், நாட்டின் பல பாகங்களிலும் உள்ள, ரசிகர்கள் யாழ்ப்பாணமையத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போட்டியை - யாழ். மாணவர்களின் திறமையை ரசித்துக்கொண்டிருந்த வேளையில், திடீரென மைதானத்திற்குள் புகுந்தவர்கள் அட்டகாசம் செய்து போட்டியைக் குழப்பியதன்மூலம் எதனைச் சாதிக்க முடிநதது.

யாழ்ப்பாணத்தில் இப்படித்தான் போட்டி வைப்பார்கள் என்பதையா? அல்லது யாழ்ப்பாணத்தவர்களின் பண்பாட்டு முறைமை இப்படித்தான் என்பதையா? அவர்கள் நிலைநாட்டியுள்ளார்கள் என்ற வினா போட்டி குழம்பியதால் மனம்நொந்து போனவர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

எதுவாயினும், ரசனை என்பது தெளிந்த மனதோடு இருப்பவர்களுக்கு மட்டுமே உரியது. மாறாக சுயநினைவின்றி, ஒருவகையான மனக்கிளர்ச்சியுடன் ரசிப்பவர்கள் ஆகிவருகின்ற நேரத்தில் அடுப்பிற்குள் தள்ளிவிடுபவர்களாக இருப்பர்.

அத்தகையதோர் நிலைமை எமது யாழ்ப்பாண மண்ணில் இருப்பதை இப்போதாவது நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உதைபந்தாட்டப் போட்டியாயின் சரி, மிக முக்கியத்துவம் வாய்ந்த வடக்கின் மாபெரும் போட்டியாயின் சரி எதிலும் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கென்றே ஓர் கூட்டம் உருவாகிவிட்ட நிலைமை சிந்திப்பதற்குரி யது.

ஆக உலகநாடுகளின் கனவான்களின் போட்டியாகப் புகழப்பட்ட கிரிக்கெட்போட்டி யாழ்ப்பாணத்தின்.... முடிந்துபோனமை வேதனைக்குரியதே.

# முக்கிய கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முஸ்லிம்களின் உரிமைகள் புறக்கணிப்பட்டுள்ளவ

## இலங்கை முஸ்லிம் கவுன்சில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகள் ஐக்கிய தேசிய முன்னணி அரசங்கத்தினதும் ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியினதும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக இலங்கை முஸ்லிம் கவுன்சில் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை, முஸ்லிம்களின் விவகாரம் தொடாபான தமது நிலைப்பாட்டினைப் பிரதமரும்,ஜனாதிபதியும் வெளியிடவேண்டும் என கவுன்சிலின் தலைவர் அமீன் வேண்டு கோள் விடுத்ளதுள்ளார்.

★சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்காக சுயாதீன முஸ்லிம் குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும்.

★2ஆயிரம் முஸ்லிம்களை பொலிஸில் சேர்த்துக் கொள்வதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்படல் வேண்டும்.

★போர்நிறுத்த உடன்படிக்கையை மீறி கிண்ணியா முஸ்லிம் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட முஸ்லிம்களிற்கு அச்சுறுத்தலாக அமைத்துள்ள குரங்கு பாஞ்சான் புலிகளின் முகாமையும் ஏனைய முகாம்களையும் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★வடக்கில் இருந்து வெளியேறிய முஸ்லிம்களும் கிழக்கில் இடம் பெயர்ந்த முஸ்லிம்களையும் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

★வடகிழக்கு இணைத்திருப்பதா இல்லையா என்பதை அறிய கிழக்கு மாகாணத்தில் கருத்துக் கணிப்பு நடத்த வேண்டும் ஆகியகோரிக்கைகளே முன்வைக்கப்பட்டன.(உ-6)

### யாழ்.பல்கலை விசேட அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர்கள்

## ம. உ. ஆ. குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் 2004ம் கல்வி ஆண்டிற்கான விசேட பாட அனுமதியில் தாம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மாணவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாண்டில் பல்கலைக்கழகத்தின் விசேட கற்கை நெறிகளுக்கான தெரிவில் ஏற்பட்ட முறைகேடுகளால் சுமார் 90 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை இழந் துள்ளனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற விசேட அனுமளதிகளுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டிற்கான விசேட அனுமதி வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.இது தம்மீது திணிக்கப்பட்ட அநீதி எனவும் இதற்கு தகுந்த பதிலை பல்கலைகழக மாணியங்கள் ஆணைக்குழுவினரிடம் பெற்றுத்தரக் கோரியுமே இம்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு விசேட அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இணைந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடமும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரிடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடமும் முறைப்பாட்டு மகஜர்களையும் கையளித்துள்ளனர்.

(உ-4,19)

## திடீர் பொதுத் தேர்தலுக்கு அதிகார ஆசையே காரணம்

### வேட்பாளர் வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

அதிகாரத்திற்கான தீவிர விருப்பத்தின் காரணமாகவே பொதுமக்கள் மீது பொதுத் தேர்தல் எதிர்பாராத வகையில் திணிக்கப்பட்டுள்ளது என புதிய இடதுசாரி முன்னணியின் வேட்பாளர் வாசுதேவ நாணயக்கர தெரிவித்துள்ளார்

கண்டியில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற தேர்தல பிரசார கூட்டத்தில் கலந்து.கொண்டு பேசுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

நாட்டில் உள்ள இரண்டு பிரதான கட்சிகளும் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றுவதிலேயே அக்கறை காட்டி வருகின்றன.

இதனாலேயே பொதுத்தேர்தல் ஒன்றை மிகக்குறுகிய காலத்துக்குள் பொது மக்கள் சந்திக்க வேண்டி இருககின்றது.

பொய்வாக்குறுதிகளை வழங்கி மக்களிடம் வாக்குகளைப் பெற்று ஆட்சிப்பீடமேறும் எந்த ஒரு அரசியல் கட்சியும் மக்களின் அபிலாஷைகளையோ அல்லது அவர்களின் கோரிக்கைகளையோ நிறைவேற்றுவதில்லை.

இத்தகைய அரசியல் கட்சியினர் மக்களை மறந்து செயற்படுவார்கள். பின்னர் மீண்டும் ஒரு தேர்தல் வரும்போதே மக்களை சந்திப்பார்கள் என்று கூறியுள்ளாா.

(உ-60,10)

## தினசரி தியானம்

### ௐ விவேகச் சிந்தனைகள்

ஒவ்வோர் உயிரிலும் தெய்வீகத் தன்மை மறைந்திருக்கின்றது வெளியேயும் உள்ளேயும் இருக்கும் இயற்கையை கட்டுப்படுத்தி உள்ளே குடிகொண்டுளள இந்தத் தெய்வீக தன்மையை மலரும்படி செய்வதுதான் முடிவான இலட்சியமாகும்.

சுவாமி விவேகானந்தர்

### நோர்வே அனுசரணையுடன்

## தொழில் முயற்சி அபிவிருத்தி நிதியம் இலங்கையின் அமையும்

(கொழும்பு)

அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான நோர்வே நிறுவனம் பிராந்திய வர்த்தக சம்மேளனங்களுடன் இணைந்து தென் பிராந்திய சம்மேளன தொழில் முயற்சி அபிவிருத்தி நிதியம் ஒன்றை இலங்கையில் ஆரம்பிப்பதற்கு தேவையான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது

இதனால் இலங்கையில் சிறிய அளவிலானதும நடுத்தர அளவிலானதுமான தொழில் முயற்சிகளை புனரமைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை கடற்றொழில் கடல்சார்முயற்சிகள் சுற்றுலாத்துறை சிறிய கைத்தொழில்கள் உற்பட்ட பல்வேறு தொழில்களை மேம்படுத்தி பொருளாதாரத் துறையில் கணிசமான அளவு வளர்ச்சியை ஏற்படுத்தவதே தமது பிரதான நேக்கமான அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான நோர்வே நிறுவனம் தெரிவித்துள்ளது

(உ60,10)

## கப்பம் கேட்டு சிறுமி கடத்தல்

(கொழும்பு)

இனந்தெரியாத நபர்கள் சிலர் 23 லட்சம் ரூபாவைக் கப்பமாக் கேட்டு பாடசாலை மாணவியொருத்தியைக் கடத்திச் சென்றுள்ளனர்.

பண்டாரவளையைச் சேர்ந்த சிறுமியையே கடத்திச் சென்று அப்புத்தளை வீடு ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டதாகவும், இத்தகவலை அறித்த அப்புத்தளை பொலிஸார் சம்பந்தப்பட்ட இடத்திற்கு விரைந்து சென்று சிறுமியை மீட்டுள்ளதுடன், இக்கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையதாக் கருதப்படும் 5 இளைஞர்களையும் கைது செய்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

(உ-61,10 )

## தவக்கால சிந்தனை-26

மேடையிலிருந்து அள்ளி வீசப்படும் வார்த்தைகளை நம்பி அரசியல்வாதிக்கு ஓட்டு போட்ட பின்தான் தெரியும். பெருத்த ஏமாற்றம் காதலனின் காதல் சொட்டும் வார்தைகளில் அயார நம்பிக்கை வைத்து... மோசம் போன அபலைப் பெண்களின் கதைகள் தான் எத்தனை! ஆனால் கொடுத்த வாக்கை உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றும் மனிதர்களை மதிக்கின்றோம். இயேசு இவ் வாாத்தையால் தூரத்திலிருந்தே அரசு அலுவலர் மகனை குணமாக்குகின்றாா். 'நீ புறப்பட்டுப போகும்,உன்மகன் பிழைத்துக் கொள்வான்' என்ற வார்த்தையில் அபார நம்பிக்கை வைத்து அரச அலுவலா் மறுமொழி பேசாது திரும்பி செல்கிறாா். என்னே அவரது விசுவாசம்! மகன் பிழைத்துக் கொண்டான் என்ற செய்தி கேட்டு இயேசுவின் வார்த்தையின் கால நேரத்தை கணக்கிட்டு உறுதிசெய்து கொண்டாா். விசுவாசம் கொண்ட நமக்கு இறைவார்த்தை உரிய காலத்தில் வந்தது நாம்தான் ஏற்றுக்கொள்ளவில்லை. இறை வாாத்தையை பிளவுபடா உள்ளத்தோடு ஏற்றுக் கொள்ளுவோம். வாழ்வு பெறுவோம்

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

### ஐ.ம.சு....

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளையும், பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணயசபையாக மாற்றி குறைந்த பெரும்பான்மையுடன் அரசியல் யாப்பை மாற்றும் யோசனைகளையும் விடுதலைப் புலிகள் எதிர்தது வருகின்றார்கள். இந்நிலையில், உட்ன்பாடற்ற விடயங்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை அவர்களால் எவ்வாறு முன்னெடுத்துச்செல்ல முடியும் என்றும் பிரதமர் அங்கு கேள்வி எழுப்பினார். (ம)

# ஒருநாள் கிரிக்கெற் தொடர் பாகிஸ்தானை இந்தியா வென்றது

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டித்தொடரில் இந்திய அணி 5 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெற் இழப்பிற்கு 293 ஓட்டங்களைப்பெற்றது.இதில் இன்சமாம் 123 ஓட்டங்களையும், யசீர் ஹமீட் 45 ஓட்டங்களையும், யுனிஸ் கான் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பதன், பாலாஜி, சகீர்கான்,கார்த்திக் ஆகியோர் தலா 2 விக்கெற்றையும் டெண்டுல்கர் ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 45 ஓவர்களின் முடிவில் 5 விக்கெற் இழப்பிற்கு 294 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. பந்து வீச்சில் அக்தர், முகமட் சமி ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும், அப்துல் ரசாக் ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் 2:2 என்ற நிலையில் வெற்றி பெற்று சமநிலையில் உள்ளன. (ச)

## இப்படியும் செய்கிறார்கள் அரசியல்வாதிகள்

(கொழும்பு)

தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்றை நாட்டி வெவ்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் ஒரே நாளில் வெவ்வேறு நேரங்களில் திறந்துவைத்த சுவாரசியமான சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

ரயவெல விகுனு பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. நேற்றுக்காலை 10 மணியளவில் ஐக்கியதேசியக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சித்திர மனுதிலக மேற்படி தொலைத்தொடர்புக் கோபுரத்தைத் திறந்துவைத்தார். அங்கு பொதுக்கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 4 மணியளவில் தனது ஆதரவாளர்களுடன் சென்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான டி.எம்.ஜயரட்ண தானும் தொலைத்தொடர்புக் கோபுரத்தைத் திறந்துவைத்து உரையாற்றினார்.

தேர்தல் நெருங்கிவரும் சமயத்தில் அரசியல்வாதிகள் என்ன செய்வதென்று தெரியாது ஏட்டிக்குப்போட்டியாக பெரும் பீரங்கிப்பிரசார யுக்திகளைக் கையாண்டு வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (ச)

### ஜனாதிபதியுடன்...

திருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை, புளொட் அமைப்பைச் சேர்ந்த மோகன் என்பவர் அரச உலங்கு வானூர்திமூலம் மட்டக்களப்புக்குச் சென்றுள்ளதாகவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவியான ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்கவின் செய்தியொன்றை அவர் கருணாவுக்கு எடுத்துச் சென்றதாகவும் கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை, நாட்டின் இனப் பிரச்சினைக்கு இறுதித்தீர்வுகாணும் எமது பயணத்தில் கருணாவுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட எந்தத் தரப்பினருடனும் பங்காளிகளாகச் செயற்பட புலிகள் தயாரில்லை என விடுதலைப் புலிகளின அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(த)

### நிபந்தனையின்றியே...

டையேயுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்டது போன்று அதிகாரப்பரவலாக்கல், நிர்வாகப் பரவலாக்கல் பற்றிய முரண்பாடுகள் எதுவுமில்லை.அனைத்து சமூகத்தினருக்கும் சமமான உரிமைகள், வடக்கு கிழக்கு மக்களுக்கு அடிப்படை உரிமைகளும், கல்வி, தொழில் வாய்ப்பு போன்றவற்றில் சமவாய்ப்பும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த)

### நிலத்தை...

வடிக்கை குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளதுடன், சம்பவம் குறித்து உடனடியாக வவுனியா மாவட்டப் பொலிஸ்மா அதிபரினதும், இராணுவத் தளபதியினரதும் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

இதனையடுத்துச் சோதனை நடவடிக்கைகளை அதிரடிப்படையினர் இடைநிறுத்தியதுடன், நீதிமன்ற அனுமதியன் கீழ் சோதனை நடவடிககைகளை மேற்கொள்ளவிருப்பதாகக் கூறி அங்கிருந்து சென்றனர். (ச)



பதினெட்டு வயதுக்குக் குறைந்த 35 சிறுவர்களை விடுதலைப் புலிகளால் யுனிசெவ் நிறுவன அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் காட்சியைப் படத்தில் காணலாம்.

## 50 புலி உறுப்பினர்கள் இன்று திருமலை பயணம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் 50 உறுப்பினர்கள் வவுனியா ஊடாக திருகோணமலை சம்பூர்ப் பகுதிக்கு இன்று செல்லவுள்ளனர்.

இதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளது. விடுதலைப் புலிகளின் தரப்பில் இருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமையவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இன்று காலை 50 விடுதலைப் புலி உறுப்பினர்கள் வவுனியா ஓமந்தை சோதனைச்சாவடியூடாக திருகோணமலைக்குப் பயணிக்க இருக்கின்றனர். (த)

## பால் மா விலைக்குறைப்பு

(கொழும்பு)

கடந்த பெப்ரவரி மாதம் 13ம் திகதியிலிருந்து இறக்குமதி தர்வை 12 வீதத்திலிருந்து 6 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி அங்கர் முழு ஆடைப் பால்மா 400 கிராம் பக்கற் ஒன்றின் விலை 136 ரூபாவிலிருந்து தற்போது 131.50 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இவ் விலைக் குறைப்பு நுகர்வோர் விவகார அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (த-6)

## தேர்தல் வன்முறைகள் 707ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

வேட்புமனுத்தாக்கல் செய்த தினத்திலிருந்து நேற்றுக்காலை 6 மணிவரையிலான காலப்பகுதியில் 707 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

நேற்றுக்காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் 42 தேர்தல் வன்முறைச் சம்பங்கள் இடம்பெற்றுள்ளது.

இத்தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள்திகாமடுல்ல மற்றும் அநுராதபுரம் போன்ற இடங்களிலிருந்தே கூடுதலாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. (ச)

THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 1ல் இருந்து மேற்படிப்புவரை ஆங்கில இலக்கணம், கடிதம், கட்டுரை, கதைக்கப் பயில ஆங்கிலம் மூலம் விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை. (8462)

இன்னுயிர் நீத்த நம்மவர் நோக்கம் இழிவுற நடப்பேனா...!



ஆனையிறவைப் பிடிக்க நீங்கள் ஒரு காலில் நின்றாலும்..... அதற்கு,
விலை கொடுக்க உங்களில் எத்தனைபேர் முன்வருவர்..... வந்தாலும்
பால் கொடுத்த மார்பை அறுத்தெறிவேன் என்ற
வீரத்தாய் வழிவந்த நம் மகளிர் மட்டும் போதும்.....
வீணே வாய்ச்சவாடல் விவேகமாகாது.....
என்றுரைத்த நானா.....? சொல்வேன்

ஆனையிறவை ஆட்சிக்குக் கொடுங்களென்று.....?
ஆனையிறவு இப்போதும்..... இனி எப்போதும் எங்களுக்கே.....

கருணையும், கரமும் இணைந்தது தானே தமிழ் இனத்தின் விடுதலை.....
கைகட்டி நின்று வேடிக்கை பார்க்காதே.....
கடமை நமக்கென்று விழித்தெழுந்து வாரீர்.....!

இவர் வாய் ஒரு போர் வாள்..... அதுவும் சுடர் வாள்.....

வீ.ஆனந்தசங்கரி (தலைவர்-தமிழர் விடுதலைக் கூட்டணி)
தலைமையிலான
சுயேச்சைக் குழு 1
பளை
வாழ்மக்கள்

அறிவித்தல்:- எக்காரணம் கொண்டும் சுயேச்சைக்குழு – 1 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளமாட்டாது என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றோம். தயவுசெய்து வீண் வதந்திகளை நம்பவேண்டாம். (C/0008)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.